
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும். அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#943**
**July-Aug 2024**

**பொருளடக்கம்**


✡ மனதைத் தொடும் வார்த்தைகள் ........... 2

✡ நாவின் வல்லமை............................ 7

✡ தீர்க்கமாக எண்ணுதல் அவசியம்.......... 15

✡ வேதாகமம் பேசுகிறது ....................... 19




**BS Tamil Version - 85** 2024

# மனதைத் தொடும் வார்த்தைகள்

Touching Words

நமது மதிப்புமிக்க கர்த்தராகிய இயேசுவே எல்லா பாவங்களையும் மன்னிக்கும் கிருபையாக இருக்கிறார். மேலும் மீட்பரும் நியாயாதிபதியுமாகிய நமது அருமை ஆண்டவருடைய, மகாபெரிய பலியின் மூலம், நம்மை தேவன் ஏற்கத்தகுந்த ஊழியர்களாக இருக்க அனுமதிப்பது அல்லது தகுதிப்படுத்துவதே இந்த கிருபையின் நோக்கமாகும். ஆம், இயேசுவே தம்முடைய இஸ்ரயேலை நியாயந்தீர்ப்பார். யோவான் 5:22-ல் எழுதப்பட்டுள்ள விலையேறப்பெற்ற வார்த்தைகளை பரிசீலிப்போம், பிதாவானவர், “**நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.**”அவரே நியாயாதிபதி, ஒரே மெய்யான சபை மட்டுமல்ல, ஆனால் ஏற்ற காலத்தில் உலக மனுக்குலத்தார் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும்; வெளி. 20:12-ல் தேவனுடைய புஸ்தகத்தின் வார்த்தைகள் இவ்வாறு கூறுகின்றன, “**மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்: அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன.**”இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புஸ்தகங்கள் என்பது பழைய மற்றும் புதிய ஏற்பாடாகும், தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த பிள்ளைகள் அனைவரும் இதனைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். “**புஸ்தகங்கள் திறக்கப்பட்டன**” என்பது முழுமையாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளது, அதனால் “**அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை.**” (ஏசா. 35:8).

வெளி. 20:12-ம் வசனம் இவ்வாறு தொடர்கிறது, “**ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது: அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.**” இரண்டு ஜீவ புஸ்தகங்கள் உள்ளன என்பதை நாங்கள் கவனத்தில் கொள்கிறோம் - ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கும் மற்றொன்று தெரிந்தெடுக்கப்படாதவர்களுக்குமானது. கர்த்தருடைய “செம்மறியாடுகள்” அல்லது தகுதியானவர்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்கான இந்தப் புஸ்தகங்களில் என்றென்றும் ஜீவித்திருப்பதற்கான தகுதியுடையோர்கள் பற்றிய பதிவு இருக்கும். “**அவர்களின் கிரியைகளுக்குத்தக்கதாக**”என்ற வார்த்தையுடன் இந்த வசனம் முடிவடைகிறது. எனினும் தெரிந்தெடுக்கப்படாதவர்களை, மகாபெரிய




மத்தியஸ்தர் அவரவர் திறமைக்கு ஏற்ப அவர்களின் அபூரண கிரியைகளை ஏற்றுக்கொள்வார்; ஆனால் அவர்கள் சீர்கேட்டிலிருந்து எழும்பும்போது, அது அதிகமதிகமாக தேவைப்படும். முடிவில் பூரணமடையும்போது, கிரியைகளின் முழுமையான பரிபூரணத்தன்மை தேவைப்படும். ஆயிரவருட யுகத்தின் முடிவில் எஞ்சியிருக்கும் அனைவரிடமும் பூரண கிரியைகள் சாத்தியமாகும், மேலும் பூரண கிரியைகள் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும்.

“**மதிப்புமிக்க அருமை ஆண்டவரே என் கரத்தை பிடித்துக் கொள்ளும்**”: மனித கரம் மிகவும் அற்புதமான துணையுறுப்பு. நமது கரங்களால் நம்முடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறோம்: இரண்டு கைகளின் முஷ்டி பொதுவாக மற்றொருவரை காயப்படுத்தும் நோக்கத்துடன் துன்மார்க்கத்தை குறிக்கிறது. திறந்த கரம், நமது நட்பையும் கைகுலுக்குவதன் மூலம், மற்றவரோடு ஒற்றுமையையும் விவரிக்கிறது. எழுதுவது அல்லது நம் எண்ணங்களையும் கற்பனைகளையும் தட்டச்சு செய்தல் மரத்தில் ஏறுதல், அதன் பழங்களைப் பறித்தல், புதிதாகப் பிறந்த குழந்தையை மென்மையாகப் பிடித்தல், அவர்களுடைய வாழ்விற்குள், பாதுகாப்பின் கரத்துடன் அவர்களை வழிநடத்தல், நண்பரை ஐக்கியம் என்னும் வலது கரத்தால் வாழ்த்துதல் போன்றவற்றிற்கு கரமானது உபயோகமாயிருக்கிறது. இந்த ஆய்வுக்கு பொருந்தக்கூடிய மற்றொரு வேதவசனம் சங். 16:11, “**ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்: உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.**”நமது கரம் நாம் யார் என்பதை வெளிப்படுத்துகிறது மற்றும் ஒரு புத்தி நுட்பமுள்ள சிருஷ்டிகரின் வல்லமையையும் நிரூபிக்கிறது. நம்முடைய கரம் நமது சித்தத்தையும் நோக்கத்தையும்

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates: One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

வெளிப்படுத்துவது போல், தேவனுடைய வலது கரமாகிய கிறிஸ்து, பரலோக பிதாவை நமக்கு வெளிப்படுத்துகிறார், மேலும் தேவனுடைய வல்லமையுள்ள ஒருவராக அவரது திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுகிறார். சகலமும் பிதாவால் குமாரன் மூலமாக உண்டானவை (1 கொரி. 8:6).

கிறிஸ்து தேவனுடைய வலது கரமாயிருக்கிறார்; தேவனுடைய கரமாகிய கிறிஸ்துவின் மூலமாகவே, பிதாவானவர் நம்மைத் தம்மிடமாக இழுத்து, மரணக் குழியிலிருந்து நம்மை தூக்கி, ஆவிக்குரிய பொல்லாப்பிலிருந்து நம்மைக் காப்பாற்றி, ஒரு குயவன் களிமண்ணை வடிவமைப்பது போல, நம்மை வடிவமைத்து, துக்கத்தின் கண்ணீரைத் துடைக்கிறார், நமது தைரியம் தோல்வியடையும் போது மெதுவாக நம்மை நடத்துகிறார், நாம் வழிதவறிச் செல்லும்போது நம்மை சிட்சிக்கிறார்; நாம் நன்றாகச் செய்யும்போது, நம்மை முதுகில் தட்டிக்கொடுத்து, "**நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே!**" என்று கூறுகிறார். மேலும் நாம் என்ன செய்யலாம்? 1 பேது. 5:6 இவ்வாறு கூறுகிறது: "**ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.**"

யேகோவா தேவனுக்கு விரோதமாக பொல்லாப்பு செய்து, தன்னை உயர்த்தி, ஒரு போட்டி ராஜ்ஜியத்தை நிறுவ வேண்டும் என்று எதிராளியானவன் எவ்வளவு குறுகிய நோக்குடன் இருந்தான்! சீக்கிரத்தில் சாத்தானின் முட்டாள்தனம் வெளிப்படுத்தப்படும். பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து தன்னைத்தான் தாழ்த்தியவர், ராஜ்ய அதிகாரத்திற்கு உயர்த்தப்பட்டு, பிரபஞ்ச ராஜ்யத்தில் பிதாவின் வலதுபாரிச நிலைக்கு மிகவும் உயர்த்தப்பட்டார்; ஆனால் அபகரிக்க முயற்சித்தவன் (சாத்தான்) இறுதியில் முழுமையாகக் கட்டப்பட்டு முற்றிலும் அழிக்கப்படுவான்.

**"என்னை வழிநடத்தும்":** அநேகமாக இது நமது மனதை கர்த்தருடைய ஜெபத்தின் ஒரு பகுதிக்கு கொண்டுவருகிறது, "**எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்**" (மத். 6:13). இந்த வசனத்தில், தேவன் நம்மை வழிநடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம், அதனால் நம்மால் கையாள முடியாத மிகவும் கடினமான எந்த சோதனையும் நம்மீது வராது. இந்த தற்போதைய காலத்தை விட அதிக தேவை இருந்த காலம் ஒருபோதும் இல்லை எனலாம். "தேவனுடைய நல் வார்த்தையில்" நாம் அதிகமதிகமாகப் பங்குபெறும்போது , அது "தேனைப் போல இனிமையாகக்" காணப்படுகிறது; மேலும் அது எவ்வளவு அதிகமாக "உண்ணப்படுகிறதோ" அவ்வளவு இனிமையாக ஆகிறது. இருப்பினும், துன்பத்தினாலான கசப்பு, தேவனுடைய சத்திய வார்த்தையின் இனிமையுடன் கலப்பதால் ஏற்படும் பின் விளைவுகள் எப்போதும் சற்றேறக் குறைய இருக்கும். தேவன் பிரதிஷ்டை செய்தவர்களை, அவருடைய வேதவசனத்தின் மூலம், அவருடைய தேனை உண்ணும்படி அழைக்கிறார். எரே. 15:16 இவ்வாறு கூறுகிறது: "**உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்: உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது.**" ஆம், ஞானம் அதை விரும்பி, விடாமுயற்சியுடன் அதைத் தேடுவோரை நேசித்து அவர்களுக்கு நன்மை செய்கிறது. ஞானம் என்பது அதன் ஆதாரமான யேகோவா தேவனிடமிருந்தும், தேவனுக்காகச் செயல்பட்டு, பசுமையான மேய்ச்சல் நிலங்களுக்கும், அமைதியான தண்ணீரண்டைக்கும் நம்மை அழைத்துச் செல்லும் நமது ஆண்டவராகிய இயேசுவிடமிருந்தும் வரும் அன்பின் வெளிப்பாடாகும். அவர்களின் தீவிர அன்பு குறிப்பாக அவர்களின் அன்பான இரக்கத்தின் ஆழமான புரிதலுக்கு வழிநடத்தப்பட விரும்புவோரில் வெளிப்படுகிறது. தேவனால் வழிநடத்தப்பட விரும்பும் அவருடைய பிள்ளைகளுக்கான, தேவனுடைய வார்த்தை மத். 7:7-8 இவ்வாறு கூறுகிறது: "**கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்: தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்: தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்:**" "**ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்: தேடுகிறவன் கண்டடைகிறான்: தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.**" அது போதவில்லை என்றால், வெளி. 3:20 இவ்வாறு கூறுகிறது: "**இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்: ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.**" விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்! தேவன் தனது பிள்ளைகள் சத்தியத்தைப் புரிந்துகொள்வதற்காக, பல்வேறு நிலைப்பாட்டிலிருந்து வழிநடத்துகிறார், மேலும் அவர் நம்மீது கொண்டுள்ள மிக உயர்வான அன்பை உணர்ந்துகொள்வது சுயதாழ்மைக்கு வழிவகுக்கிறது. "**உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்: நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்.**" (சங். 25:5).

**"என்னை நிலைநிற்க செய்யும்":** நம்மில் பலர் குழப்பமான இந்த பொல்லாத உலகில் தனியாக நின்றோம். இவ்வுலக வாழ்விலிருந்து எப்படி வெளியேறுவது என்று தெரியாமல், முடிவற்ற கல்லறையில் நாம் நடந்தோம். தேவனுடைய ஏற்ற காலத்தில் நாம் சில மத சம்மந்தமான நோக்கங்களை அறிந்தோம், அதன் பின்னர் சில வேத ஆராய்ச்சி பாடங்களுக்கு அழைக்கப்பட்டோம், மேலும் எண்ணிக்கையுள்ள நபர்களைச் சார்ந்து ஆறுதல் கண்டோம். ஆம், ஆனால் சிறிது கால நீதியின் போதனைக்குப் பிறகு, தேவன் நம்மைத் தனியாக நிற்கவும், முழுமையான பிரதிஷ்டைக்கும், கர்த்தருடைய வழிகாட்டுதலில் நம்பிக்கை வைக்கவும் அழைக்கிறார். அதன்பிறகு, நம்முடைய சுயகட்டுப்பாட்டுடன் பொறுமையைக் கூட்டி, நம்முடைய குணத்தை வளர்த்துக் கொள்ள அழைக்கப்பட்டதால், தடைகளுக்கு மத்தியில் நன்றாகச் செயல்படுவதில் நம்மை நாமே ஆள முடியும். உலகத்திலிருந்தும் அதன் சபை ஸ்தாபன மார்க்கத்திலிருந்தும் நாம் சுயாதீனமாக இருப்பதாக அறிவிக்க, தேவன் நம்மைத் தனியாக நிற்கும்படி கேட்கிறார். நம்முடைய நம்பிக்கையில் நாம் தனித்து நிற்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். இந்த தேவையான நடவடிக்கையில் நமது

பழைய பழக்கங்களை மேற்கொள்ள தேவையான உதவிகள் நமக்கு வழங்கப்பட்டன. ஆயினும்கூட, இந்த எல்லா உதவிகளுடன், பாவம் மற்றும் சுயநலத்தின் சேற்றில் ஆழமாக மூழ்கி, அதனுடன் தொடர்புடைய பல மோசமான குணங்களைக் கொண்டவர்கள், மிதமான நல்ல மற்றும் உன்னதமான பாத்திரங்களாக மாறுவதற்கு முன், பெரிய போதகரின் கீழ் பல ஆண்டுகால பள்ளிப்படிப்பு மற்றும் ஒழுக்கப் பயிற்சிகள் தேவைப்படலாம். இந்த வாழ்க்கை எதற்காவது அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமானால், நாம் தனியாக நின்றாலும் கிறிஸ்துவுக்காகவும் சத்தியத் திற்காகவும் நிற்க வேண்டும். ஆம், தேவன் ஆசீர்வதிக்கிறார், நாம் தனியாக நிற்கவில்லை என்பதையும், இதற்கு முன்பு நமக்குத் தெரியாத பல நண்பர்கள் இருப்பதையும் காண்கிறோம். ஒரு மனிதன் நீண்ட காலமாகவும் கடினமாகவும் விடாமுயற்சியுடன் இருந்தால், நம் கர்த்தர் மற்றும் எஜமானரின் மூலம் அவற்றை அடைய முடியும் என்பதை நாம் நீண்ட காலமாக அறிந்திருக்கிறோம்.

**''நான் சோர்வாக இருக்கிறேன்'':** சரீர ரீதியான உழைப்பு அல்லது மன ரீதியான உழைப்பு மனுக்குலத்திற்கு சோர்வைக் கொண்டுவருகிறது. பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகிய நாம் சத்திய வார்த்தையின் பாதுகாவலராக மாறுகிறோம்; ஆம், நாம் வெற்றி பெற போராட வேண்டும், அது சோர்வைக் கொண்டுவருகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு கூறினார்: ''**ஆதலால், ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்.**'' (1கொரி. 9:26). ரஸல் போதகர் தனது சோர்வை இந்த மொழிநடையில் விவரிக்கிறார்: ''**நான் சோர்வாக இருக்கிறேன்: என் மாம்சம் சோர்வாக இருக்கிறது: என் எலும்புகள் சோர்வாக இருக்கின்றது: எனது எலும்புகளின் மஜ்ஜையும் சோர்வடைந்திருக்கிறது: நான் முழுவதும் சோர்வாக இருக்கிறேன்.**'' எரே. 45:3 இந்த எண்ணத்தை நம் மனதில் கொண்டு வருகிறது, என் வியாகுலத்தினால் இளைத்தேன், இளைப்பாறுதலைக் காணாதே போனேன். தாமஸ் கிரான்மர், தனது பாடுகளின் போது மனதளவிலும், மனஉறுதியிலும் சோர்வடைந்திருக்கையில் ஒரு சிறிய மறுதலிக்கும் ஆவணத்தில் கையெழுத்திட கட்டாயப்படுத்தப்பட்டார், அவ்வாறு செய்வதன் மூலம் அவர் விடுவிக்கப்படுவார் என்றும் புரிந்து கொண்டார். ஆனால், இவர் விடுதலையாவது போப்பு மார்க்கத்தாருடைய எண்ணமாக இருக்கவில்லை; அவர்கள் அவரைப் பொது இடத்தில் மறுப்பு அறிக்கை அளித்தவுடன் எரிக்க வேண்டும் என்பதே அவர்களின் முழு நோக்கமாயிருந்தது. இச்சூழ்நிலையில் அவரது தைரியம் புத்துயிர் பெற்று, ஆழ்ந்து மனந்திரும்பிய கிரான்மர், தனது கோழைத் தனத்திற்காக மிகுந்த வருத்தத்தை வெளிப்படுத்தினார், மேலும் முதலில் ஆவணத்தில் கையெழுத்திட்ட அவரது தவறுக்கு காரணமாக வலது கரத்தை, நெருப்பில் வைக்க வேண்டும் என்றும் கூறினார்.

நமது ஆண்டவர் இளைப்படைந்தவராய், சோர்ந்த சமயம், யாக்கோபின் கிணற்றினருகே அமர்ந்திருந்தார் (யோவா. 4:6). அப்பொழுது சமாரிய ஸ்திரீ தண்ணீர் எடுக்க வந்தாள், அவர் அவளிடம் குடிக்கக் கேட்டார். அந்தப் பெண் அவருக்கு குடிக்க தண்ணீரைக் கொடுத்தாள், அதற்குப் பிரதிபலனாக நமது ஆண்டவர் அவளுக்கு ஜீவத் தண்ணீரைப் பற்றி கூறி, தன்னிடம் இருந்த சிறந்ததைக் கொடுத்தார். எப்பேற்பட்ட நல்லதொரு பாடம் நமக்கு இருக்கிறது! இங்கே, மகா லோகோஸாக இருந்த, தேவனுடைய குமாரனாகிய இயேசு, நம்மை மீட்கும் பலியாகத் தன்னையே கொடுக்க உலகிற்கு வந்திருந்தார், மேலும் அவர் களைப்புடனும் தாகத்துடனும் இருந்தாலும் ஒரு ஸ்திரீக்காக தன்னைத்தானே பிரயாசப்படுத்துகிறார். நமக்கு வாய்ப்பு கிடைத்தால் எவ்வாறு எல்லா ஜனங்களுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்பதற்கு எப்பேற்பட்ட ஒரு சக்திவாய்ந்த உதாரணம்! நாம் நன்மை செய்வதில் உண்மையுள்ளவர்களாக இருந்தால், நாம் நன்மை செய்வதில் நிச்சயமாக தவிர்க்க முடியாதபடி சோர்வடைவோம்; மேலும் இது பிரதிஷ்டையில் உள்ள ராஜவிசுவாசத்தின் பிரிக்க முடியாத பகுதியாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**''நான் பலவீனமாக இருக்கிறேன்'':** வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிக விசுவாச உண்மைத்துவமுள்ள கிறிஸ்தவர்களில் ஒருவரான அப்போஸ்தலனாகிய பவுல், தனது வாழ்நாளின் பெரும்பகுதியை பலவீனத்துடன் வாழ்ந்தார், அதை அவர் ''என் மாம்சத்திலே ஒரு முள்'' என்று குறிப்பிட்டார். அவருடைய சரீர பலவீனம் என்னவென்று நமக்கு சொல்லப்படவில்லை. ஆனால் அவர் மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தெய்வீக குணப்படுத்துதலுக்காக தேவனிடம் ஒரு சிறப்பு வேண்டுகோள் விடுத்ததாக கூறுகிறார். ஆனாலும் இந்த விசுவாச உண்மைத்துவமுள்ள மனிதன் குணமடையவில்லை. அவருடைய ஜெபத்திற்கு தேவனுடைய பதிலானது ஒரு அற்புதமாக இல்லாமல் மாறாக ஒரு வாக்குத்தத்தமாக இருந்தது. ''**என் கிருபை உனக்கு போதும்: பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்.**'' (2 கொரி 12:9). இந்த அனுபவத்தின் மூலம் அப்போஸ்தலனாகிய பவுல் தனது ஆரோக்கியத்துக்காக தேவனை நம்பலாம் என்பதை அறிந்து கொண்டார். உண்மையில், அவர் தனது பலவீனத்தின் காரணமாக பிதாவுடனான தனது உறவில் ஒரு புதிய ஆழத்தைக் கண்டார். ஆகையால், ''**கிறிஸ்துவினிமித்தம் எனக்குவரும் துன்பங்களிலும், இடுக்கண்களிலும்: நான் பலவீனமாயிருக்கும்போதே, பலமுள்ளவனாயிருக்கிறேன்.**'' (2 கொரி. 12:10). அப்போஸ்தலன் கூறுவதை தவறாக புரிந்து கொள்ளாமலிருக்க நாம் கவனமாக இருக்க வேண்டும். அவர் தனது பலவீனத்தைப் பற்றி மகிழ்ச்சியடையவில்லை; மாறாக, அவர் தன்னிடம் பலவீனம் இருந்தபோதிலும், அதன் மத்தியில் மகிழ்ச்சியாக இருக்கிறார், ஏனெனில் அவர் கிறிஸ்துவை போதுமானவராகக் கண்டார். எல்லோருக்கும் பிரச்சனைகள் உள்ளன. எல்லோருக்கும் பலவீனம் இருக்கிறது. முக்கியமான விஷயம் என்னவென்றால், அதை எப்படி கையாள வேண்டும் என்று நாம் தேவனிடம் கேட்பது. நம்பிக்கையே நமது பதிலின் மையமாக இருக்க வேண்டும். நமது எதிர்கால நோக்கம் என்னவென்று தேவனுக்குத்

தெரியும். வாழ்க்கையில் நாம் எதைச் சாதிக்க வேண்டும் என்று அவருக்குத் தெரியும். எனவே, நாம் அவரை முழுமையாக நம்பலாம். மாம்சத்திற்கும் அதன் பலவீனங்களுக்கும் எதிராக நம்மால் தனித்து வெற்றிகரமாக போரிட முடியாது என்றும் நம்முடைய சொந்த பலவீனத்தை நாம் உணரும் போது, நாம் கர்த்தருக்குள் பலமாக இருக்கிறோம்.

**"நான் இளைத்துப்போனேன்":** நாம் மிகவும் சோர்வடைந்து, தொடர்ச்சியான கஷ்டங்கள் அல்லது அழுத்தத்தின் மூலம் இந்த சிக்கலான உலகத்தின் மன அழுத்தத்திற்குள் வாழ்வதற்கான சவாலுடன் நாம் இளைத்துப்போகலாம், இது சோர்வினை ஏற்படுத்துகிறது. மே 31, 1947 அன்று மிச்சிகனில் உள்ள டெட்ராய்டில் நடந்த ஒரு கன்வென்ஷனில் ஜான்சன் போதகர் இந்த கருத்தை தெரிவித்தார். ஆறு மாதங்களுக்கு முன்பு, நீங்கள் என்னை ஒப்பீட்டளவில் ஆரோக்கியமாகப் பார்த்தீர்கள், இரண்டு நாட்களுக்குப் பிறகு நான் கரோனரி த்ரோம்போசிஸ் (Coronary thrombosis) நோயால் பாதிக்கப்பட்டேன். ஆனாலும் அந்த துன்பமானது எனக்கு தேவனால் அன்பினிமித்தம் கொடுக்கப்பட்டது. தேவன் உலகிற்குக் கொடுத்த இரக்கத்தின் அன்பு போன்றதல்ல, மாறாக மகிழ்ச்சியின் அன்பு. தேவன் அவருடையதும் இயேசுவைப் போன்றதுமான இருதயங்களை நேசிக்கிறார். அவர்கள் கீழ்ப்படிதலில் வளரும்போது அவர் அவர்களை அதிகமாக நேசிக்கிறார், மேலும் உலகம் அறியாத பல வழிகளில் அதை நிரூபிக்கும் போது தேவன் அவர்களில் அதிகமாக மகிழ்ச்சியடைகிறார். ராஜாதி ராஜாவால் பயன்படுத்தப்படுவதும், சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத்தின் சார்பில் நிற்பதும் எல்லா பாக்கியங்களிலும் மிகப்பெரியது; இது தேவனுடைய பங்கில் உன்னத அன்பாக இருந்தது, ஏனென்றால் என் பிரதிஷ்டையை பிதா ஏற்றுக்கொண்டார் என்பது மட்டுமல்லாமல், என்னுடைய பிரதிஷ்டையானது ஏறக்குறைய நிறைவடையும் அளவுக்கு ஊழியம் செய்வதற்கான பல வாய்ப்புகளை அவர் எனக்கு அளித்துள்ளார் என்பதையும் இது காட்டுகிறது.

**"கொந்தளிக்கும் புயலின் வழியாய்":** சங்.107:29 இவ்வாறு கூறுகிறது, "**அவர் கொந்தளிப்பை அமர்த்துகிறார்.**" கொந்தளிப்பின் மேகங்கள் கடந்த பல ஆண்டுகளாக கூட்டிச்சேர்க்கும் பணியில் இருந்து, அவை தீவிரமாக இறங்கி, கருமையாகி வருகின்றன. எந்த மனிதனும் கிரியை செய்ய முடியாத இராக்காலம் நிச்சயமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது. தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகிய நாம், நமது காலத்தின் ஆபத்துகளை முழுமையாக அறிந்திருப்போம், நிதானமாக இருப்போம், ஜெபத்தில் விழித்திருப்போம். நம்மிடம் உள்ள இந்த புரிதல் இல்லாத மனுக்குலம் மிகவும் குழப்பமான அல்லது பதட்டமான நிலையில் வாழ்ந்து வருகிறது. இக்கட்டு காலத்திலே அவர்கள் பயங்கரமான அனுபவத்தை அனுபவிப்பார்கள், ஏனென்றால் சர்வவல்லமையுள்ள யேகோவா தேவன் எவ்வாறு, ஏன், மனித உணர்வு மற்றும் சச்சரவுகளின் புயலை உலகில் இத்தகைய பயங்கரமான அழிவை ஏற்படுத்த அனுமதிக்கிறார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள் - அதே, கிருபையுள்ள சிருஷ்டிகர் புயல்கள் மற்றும் வெள்ளம், நிலநடுக்கங்களால் ஏற்படும் சுனாமிகள், கொள்ளைநோய்கள் மற்றும் பஞ்சங்கள் ஆகியவற்றை ஏன் அனுமதித்துள்ளார் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள், ஏனென்றால் இவை அனைத்தும் பூமியின் அபூரணத்தின் விளைவுகளாகும் (ஆதி. 3:24).

இந்த விஷயங்களைப் பற்றிய முழுமையான மற்றும் திருப்திகரமான புரிதல், அவரிடத்தில் உண்மையுள்ள சிலரான, இயேசுவின் சீஷர்களுக்கு மட்டுமே வழங்குவதற்காக கர்த்தரால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றைக் குறித்து அவர் இவ்வாறு கூறுகிறார், "**கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில்** [பயபக்தியாயிருப்பவர்களிடத்தில்] **இருக்கிறது: அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்**" (சங். 25:14). வெளி. 16:21-ல் சொல்லப்பட்ட புயலை நாங்கள் இவ்வாறு கருதுகிறோம், "**தாலந்து நிறையான** [சுமார் 75 பவுண்டுகள்] **பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது: அந்தக் கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்: அந்த வாதை மகா கொடிதாயிருந்தது.**" எவ்வாறாயினும், இந்தப் பொல்லாத நாளில் இப்போது உலகத்தை உடைத்துக் கொண்டிருக்கும் புயல் மேகங்களுக்கு அப்பால் தீமையை ஒழிப்பதற்கும் அனைத்து மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்பதற்கும், தேவனுடைய எல்லா வாக்குத்தத்தங்களும் மேசியாவின் முன்னிலையில், மகிமையான முறையில் நிறைவேற்றப் படும் என்று யேகோவா தேவன் வாக்குத்தத்தம் அளித்துள்ளார். அந்நாளில் ஆபிரகாம் திரும்பி வந்து இந்தப் பூமியில் மீண்டும் நடப்பார். அவரும், அவருடன் இருக்கும் இஸ்ரயேலர்கள் அனைவரும், ஆணையோடுகூட பிணைக்கப்பட்ட மாபெரும் வாக்குத்தத்தம் நிறைவேறுவதை காண்பார்கள்.

**"இரவின் ஊடாக":** தேவனுடைய வார்த்தையிலிருந்து வரும் சத்தியம் நமக்கு அறிவொளியூட்டுகிறது, மேலும் அதன் ஆவி நமது மனதுக்கும் இருதயத்துக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் அமைதியையும் கொண்டு வந்துள்ளது; இந்த பாவப்பட்ட உலகம், இருளில் தத்தளித்து, உலகப் பொருளின் மாயையினால் கண்மூடித்தனமாக, செல்வம் மற்றும் தற்போதைய உலகப் பொருட்களுக்குப் பின்னால் ஓடுவதை நாம் பரிதாபத்துடன் பார்க்க முடியும். தங்கத்தின் மகிமை ஜனங்களின் கண்களை குருடாக்கியது, அவருடைய செட்டைகளின் கீழ் குணமாக்கும் ஆயிர வருடத்தின் சூரிய உதயத்தை அவர்களால் காணமுடியவில்லை (மல். 4:2). 2 தீமோ. 4:3-4-ல் பவுல் இவ்வாறு கூறுகிறார், "**ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.**" நாம்

துன்பத்தின் இரவில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம், அதில் தூங்குகிறவர்கள் அல்ல விழித்திருப்பவர்கள் மட்டுமே, நிகழ்கால சத்தியத்தைக் கண்டு மகிழ்ச்சியடைவார்கள். இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு நம்மை உட்படுத்தி-னவருமாயிருக்கிற நம்முடைய தேவன் எவ்வளவு நல்லவர் (கொலோ. 1:13).

ஏசாயா தீர்க்கதரிசி இவ்வாறு கூறுகிறார் (21:12), ''**விடியற்காலம் வருகிறது, இராக்காலமும் வருகிறது.**'' இது தற்போதைய சூழ்நிலையைப் புரிந்து கொள்ள ஒரு திறவுகோலைக் கொடுக்கிறது. பூமியில் இப்பொழுது இருக்கும் உபத்திரவத்தின் இருண்ட இரவைப் பற்றி தேவன் நமக்கு கூறுகிறார் - விடியற்கால வெளிச்சம் பிரகாசிக்க ஆரம்பித்த பின், 6,000 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்த பாவத்தின் ஆட்சி முடிந்து, ஏழாவது 1,000 - வருட நாளான - ஆயிரவருட ஆட்சிக்காலம் - ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. இந்த மகா உபத்திரவக் காலம் ஒரு இருண்ட புயல் - மேகம் போன்றது. ஒரு புதிய நாள் தொடங்கியவுடன், சூரிய உதயத்தின் போது, இக்கட்டுக் காலத்தின் இருண்ட மேகங்கள் இருந்தபோதிலும், இது மகிழ்ச்சிக்கான ஒரு சந்தர்ப்பம், ஏனென்றால் விடியற்காலம் வந்துவிட்டது, விரைவில், இப்போது உலகத்தை ஆக்கிரமித்துள்ள இக்கட்டான இருண்ட மேகங்கள் அகற்றப்பட்ட பிறகு, ''**நீதியின் சூரியன்** [இயேசு மற்றும் சபை] **உதிக்கும்: அதின் செட்டைகளின்கீழ்** [கதிர்களில்] **ஆரோக்கியம் இருக்கும்**''(மல். 4:2). ''**சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்.**''(சங். 30:5)!

மனித பாரம்பரியம் மற்றும் தத்துவத்தின் உமிகளால் திருப்தியடையாமல், நீதியின் சத்தியத்தின் மேல் பசி தாகங்கொண்ட, ஆனால் அதைப் பார்க்க முடியாமல் குருடாக்கப்பட்டவர்கள் தப்பெண்ணத்தாலும், மூடநம்பிக்கையாலும் குருத்துவ சூழ்ச்சியினாலும் மற்றும் மனித அடிமைத்தனத்தினாலும் தவறாக வழிநடத்தப்படும் ஜனங்களை யேகோவா தேவன் அங்கீகரிக்கிறார். அவர் உபத்திரவத்தின் இருண்ட இரவு நெருங்கி வருவதைக் காண்கிறார், ஆனாலும் ஜனங்களை அனுப்புவதற்கு முன், அவர் தம் சீஷர்கள் அனைவரையும் அவர்களுக்கு புசிக்க ஏதாவது வழங்குமாறு அறிவுறுத்துகிறார் - அதாவது ஆவிக்குரிய ஆகாரம், ராஜ்யம் தொடர்பான சத்தியங்கள், இது ''**யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலமாகிய**'' இருண்ட காலத்தின் பொழுது அவர்களுக்கு சில பலத்தையும் ஊக்கத்தையும் அளிக்கும். (தானி. 12:1).

''**என்னை வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்லும்**'': ஒரு உண்மையான மேய்ப்பராக, நம்முடைய கர்த்தர் தனது ஆடுகளுக்கு ஆகாரம் கொடுக்க தவறியதில்லை. மீகா 5:4 இவ்வாறு கூறுகிறது, ''**அவர் நின்று கொண்டு கர்த்தருடைய பலத்தில்** (போஷிப்பார்) **மேய்ப்பார்.**''(NKJV). இயேசு தம்முடைய ஜனங்களுக்கு, அப்போஸ்தலர்களின் நாளில் ''நிகழ்கால சத்தியத்தை'' கொடுத்தார் (2 பேது. 1:12).




அறுவடைகளுக்கு இடைப்பட்ட காலக் கட்டத்தின் போது, 1517-ல் தொடங்கிய புராட்டஸ்டன்ட் சீர்திருத்தத்தின் போது மார்ட்டின் லூத்தர் மூலம் வெளியிடப்பட்ட 95 ஆய்வறிக்கைகளின் மூலம் அவர்களுக்கு அதிக வெளிச்சத்தை அளித்து தேவையான உதவிகளை அவர் வழங்கினார், இந்த யுகத்தின் முடிவில் கொடுக்கப்பட்ட பெரிய வெளிச்சத்துடன் ஒப்பிடுகையில் இது ''கொஞ்சம் ஒத்தாசை'' என்று அழைக்கப்படுகிறது. (தானி. 11:34). சிறுமந்தை, திரள் கூட்டம் மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் ஆகியோருக்கு எபிஃபெனி தூதரின் கைகளினால் தேவையான சத்தியம் வழங்கப்பட்டது. 1916-ல் ரஸல் போதகரின் மரணம், 1950-ல் ஜாண்ஸன் போதகரின் மரணம் மற்றும் 1979-ல் ஜாலி போதகரின் மரணம் ஆகியவற்றோடு, சத்தியம் மேலும் முன்னேற்றம் அடையாது என்ற எண்ணம் பொதுவாக இருந்து வந்தது, மற்றும் பல சத்திய ஜனங்கள் இன்று வரை 'முன்னேற்றமடைந்து வரும் சத்தியத்திற்கு' [இந்த வார்த்தை நமது எழுத்துக்களில் சுமார் 700 முறை வருகிறது] எதிராகப் போராடியுள்ளனர்.

கர்த்தருடைய ஆடுகள் அவருடைய இடைவிடாத மேய்ச்சலின் பராமரிப்பின் கீழ் உள்ளன. அவர் ஒருபோதும் அவர்களை விட்டு விலகவும் மாட்டார், கைவிடவும் மாட்டார். இது அடையாளமான மேகஸ்தம்பம் மற்றும் அக்கினி ஸ்தம்பத்தினால் நன்கு விளக்கப்பட்டுள்ளது, இது ''சுவிசேஷ யுகத்தின் தேவனுடைய ஜனங்களை நிறைவேறுதலான எகிப்திலிருந்து நிறைவேறுதலான கானானுக்கு வழிநடத்திச் செல்லும் திறனில் ஏற்றகால சத்தியத்தையும், அதன் ஆவியையும் அடையாளப்படுத்துகிறது'' (E.Vol.8, பக்கம் 622) ''விசுவாசமற்றவர்கள் மற்றும் குறைந்த அளவு விசுவாசமுள்ளவர்களுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருளாக மாறியபோது, தம்முடைய பரிசுத்த பர்வதமாகிய, ராஜ்யத்திற்கு அவர்களை வழிநடத்த, அவர் தனது சத்தியத்தையும் அதன் ஆவியையும் போதுமான அளவு வழங்குவதில் ஒருபோதும் தவறியதில்லை. இந்த விஷயத்தில் அவர் அவர்களை ஒருபோதும் தவறவிட மாட்டார்; ஏனென்றால், ''அது எப்போதும் இருந்தது: பகலில் மேகஸ்தம்பமும், இரவில் அக்கினிஸ்தம்பமும் அதை மூடியது.'' மேலும், பிரியமானவர்களே, நாம் விசுவாச-

முள்ளவர்களாக இருக்கும் வரையில், தேவனுடைய உண்மையான ஜனங்களிடையே உள்ள நிறைவேறுதலான மேக மற்றும் அக்கினிஸ்தம்பத்தினைத் தேடலாம், அது அவர்கள் மீது எப்போதும் தங்கியிருப்பதைக் காண்போம், தேவன் அதை இவ்வாறாக வடிவமைத்துள்ளார்.'' (E.Vol.8, பக்கம் 631, 632).

மேகஸ்தம்பமும், அக்கினிஸ்தம்பமும் நேரடியாக ஆசரிப்புக் கூடாரத்தின் மீது மட்டுமே தங்கியிருந்தது; அது பிரகாரத்திலோ அல்லது பாளயத்திலோ தங்கியிருக்கவில்லை. மூப்பரான பாத்திரவான்களைப் போலவே, இப்போது நிறைவேறுதலான பிரகாரத்தில் இருப்பவர்களுக்கும், ''**உண்மையிலேயே மனந்திரும்பி விசுவாசிக்கிறவர்களுமாகிய**'' தற்காலிக நீதிமான்களாக்கப்பட்டு பாளையத்திலிருக்கும் பிரதிஷ்டை செய்தவர்களுக்கு தகுந்த ஒளியூட்டப்படுதலையும் ஆசீர்வாதங்களையும் தேவன் வழங்குகிறார். எபிஃபெனி பிரகாரத்திலும், எபிஃபெனி பாளையத்திலும் பிரதிஷ்டை செய்தவர்கள், மூப்பரான பாத்திரவான்கள் தங்கள் காலத்தில் இருந்ததைப் போலவே, இப்போது தேவனுடைய வாசஸ்தலமாகவும், ஜனங்களைச் சந்திப்பிடமாகவும், ஆசீர்வதிக்குமிடமாகவும் இருக்கின்றனர். [ஆவிக்குரிய தெரிந்தெடுக்கப்பட்ட அனைவரும் தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டதால், ''யுகங்களுக்கிடையே பிரதிஷ்டை செய்யும்'' வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் ஆகியோர் இந்த சிறந்த தயவைப் பெறுகிறார்கள்].

ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், மோசே, சாமுவேல், தாவீது, ஏசாயா, எரேமியா, தானியேல் மற்றும் யோவான் ஸ்நானன் ஆகியோரின் காரியங்களில் குறிப்பிடத்தக்க வகையில் காணப்பட்டதைப் போலவே, தேவனுடைய உண்மையான ஜனங்களாக, அவருக்கென்று பிரதிஷ்டை செய்தவர்களுக்கும், பழைய ஏற்பாட்டு காலங்களைப் போலவே சத்தியம் வழங்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய ஜனங்கள் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்யத் தேவையான சத்தியத்தை ஏற்ற சமயத்தில் தேவன் எப்பொழுதும் கொடுப்பார் என்று சில அடிப்படை வேதவசனங்கள் நமக்கு உறுதியளிக்கின்றன. நாம் விசுவாசத்தின் மூலம் அவருடைய வாக்குத்தத்தங்களை அவற்றின் சரியான பிரயோகத்தில் ஏற்றுக் கொண்டு, அவற்றை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும்.

இருளின் கிரியைகளை வெளிப்படுத்தவும், தைரியமாகவும் பயப்படாமலும் தப்பறையின் ஒவ்வொரு படுகுழியையும் குறித்து எச்சரிப்பதற்கும், அழைக்கப்பட்ட, தெரிந்தெடுக்கப்பட்ட மற்றும் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களுக்கு மட்டுமே யேகோவா தேவன் தம்முடைய சத்திய வெளிச்சத்தைக் கொடுத்துள்ளார். ஆம், உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது! உண்மையுள்ள மேய்ப்பராக, நம்முடைய கர்த்தர் தனது ஆடுகளை மேய்க்கத் தவறியதில்லை.

தேவனுடைய அன்பான பராமரிப்பின் இளைப்பாறுதலைப் பெற கணிசமான அளவு ஒழுக்கப் பயிற்சி தேவை. பெரும்பாலான ஜனங்களிடம் ஒழுக்கப் பயிற்சி பிரபலமாக இல்லாத காலத்தில் நாம் வாழ்கிறோம். பெரும்பான்மையானவர்கள் இன்பத்திற்கான சுயநல ஆசையால் ஆளப்படுவதாகத் தெரிகிறது, மேலும் அவர்கள் இதையே தங்கள் வாழ்க்கையின் முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். எதிர் பாலர் மீதான விருப்பம், உணவு மற்றும் பானத்தின் மீதான விருப்பம், பணம் மற்றும் பிற உடைமைகளை சம்பாதிப்பதற்கும் தக்க வைத்து கொள்வதற்குமான விருப்பம், பயணத்தின் மீதான விருப்பம் போன்ற ஆசைகளால் பெரும்பாலான ஜனங்கள் ஆளப்படுவதாகத் தெரிகிறது. இந்த விரிவாக்கப்பட்ட சுவிசேஷ யுகத்தின் ''**கடைசி நாட்களுக்கு**'' முன்னறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி, ''**மனுஷர்கள் தற்பிரியராயும், ...தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும் இருப்பார்கள்.**'' (2 தீமோ. 3:1-4). ***

# நாவின் வல்லமை

## The Power of the Tongue

இது உண்மையில் ஓர் சரியான தீர்மானமாகும்; தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்கள் ஒவ்வொருவரும் இந்த தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். தேவன் தம்முடைய ஜனங்களை அவர்களின் மற்ற எல்லா சூழ்நிலைகளின் மத்தியிலும், அவர்கள் பேசுகின்ற வார்த்தைகளால் நியாயந்தீர்க்கிறார் என்பதை கர்த்தர் சுட்டிக்காட்டுகிறார், ''**இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்**'' மற்றும் ''**உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்: அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்.**'' (மத். 12:34, 37; டயக்லாட்). இதிலிருந்து இருதயம் மற்றும் வாய் ஆகிய இரண்டும் அவரது மிக விசேஷமான கண்காணிப்பின் கீழ் உள்ளது எனவும், முந்தையது தனிப்பட்டவரின் குணங்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, மற்றும் பிந்தையது குணங்களின் வளர்ச்சியின் அளவாக இருப்பதைக் காண்கிறோம். எனவே, ''**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும். வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து.**'' (நீதி. 4:23, 24).

சரியான வார்த்தைகளை தொடர்ந்து பயன்படுத்துவதற்கு இருதயத்தின் சரியான நிலை அவசியம் என்பதும், இருதயத்தின் தன்மை தவறாக இருந்தால், அவர்கள் பொல்லாதவைகளைப் பேசுவார்கள் என்பதும் தெளிவா-




கிறது. "**நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்**" (மத். 12:35). ஆகவே, நம்முடைய வார்த்தைகள் கர்த்தரின் மதிப்பீட்டில் நியாயத்தீர்ப்புக்கான அளவுகோலாக இருக்கும் என்பது சரியானதாகும். மேலும் இதையே அவர் நமக்குக் கூறினார். சில நேரங்களில் தேன்போன்ற வார்த்தைகள் ஆழ்ந்த மாய்மாலத்தின் முகமூடிகளாய் மாத்திரம் இருக்கின்றன என்பது உண்மை தான்; மேலும் அந்த முகமூடியானது நிச்சயமாக எப்போதாவது கீழே விழும் அல்லது ஏமாற்றிவிடும் என்பது உறுதி – எவ்வளவு சீக்கிரம் சுயநல எண்ணம் சூழ்ச்சியால் மாறுபட்ட தந்திர உபாயத்தை அவசியமாக்குகிறதோ அவ்வளவு சீக்கிரம் விழுந்துவிடும். எனவே வார்த்தைகள், உரையாடலின் போக்கு மற்றும் நடத்தை ஆகியவை இருதயத்தின் வெளிப்பாடாக உள்ளது என்பது உண்மை.

அப்படியானால், நமது முதல் கவனம் இருதயத்தின் மீது இருக்க வேண்டும் – அதன் உணர்வுகளும் இயல்புகளும் முழுமையாக தெய்வீக கிருபையின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்; அப்பொழுது சத்தியம் மற்றும் நீதியின் ஒவ்வொரு கொள்கையும் இருதய சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டிருக்க வேண்டும். நீதி, இரக்கம், சகோதர சிநேகம், அன்பு, விசுவாசம், சாந்தம், தேவன் மற்றும் கிறிஸ்துவின் மீதான மிகுந்த பயபக்தி, பரிசுத்தத்தின் அனைத்து சௌந்தரியங்கள் மீதான தீவிர அன்பு ஆகியவை ஜீவியத்தின் ஆளுமைக் கொள்கைகளாக உறுதியாக நிலைநிறுத்தப்பட வேண்டும். இந்த நியமங்கள் இருதயத்தில் நிலைபெற்று, செயல்படுத்தப்பட்டால், சத்தியம், ஞானம் மற்றும் கிருபை ஆகியவற்றையே நம் வாய் பேசும்.

நீதி. 23:7 இவ்வாறு கூறுகிறது, "**அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்.**" நமது பொதுவான எண்ணங்களே நம்முடைய பேச்சையும் நடத்தையையும் கட்டுப்படுத்துகின்றன. எனவே, எவர் ஒருவர், தனது இருதயத்தின் மீது சரியான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கிறாரோ, அவர் வார்த்தையின் ஒவ்வொரு அர்த்தத்திலும் தன்னை அடக்கியாளுவார். நம்முடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், நம்முடைய வழிகள் நீதியின் வழிகளாயிருந்தால், அப்பொழுது செவிசாய்க்கிறவர்களுக்கு பக்திவிருத்தி உண்டாகும்படி, இருதயத்தின் நிறைவிலிருந்து நன்மையானவைகளைப் பேசுவோம். நமது வழிகள் சரியாகவும் பரிசுத்தமாகவும் இருக்கும் போது, பேசும் வார்த்தைகள் எப்போதும் சரியாகவும் பரிசுத்தமாகவும் இருக்கும். பொதுவாக ஜனங்கள் தங்களைத் தாங்களே நேசிக்கிறார்கள், எனவே தங்களைப் பற்றி கசப்பான அல்லது இரக்கமற்ற எதையும் பேசுவதைத் தவிர்க்கிறார்கள். ஆனால் மற்றவர்களை வெறுக்கிறவர்கள் அல்லது அவர்கள் மீது தனது இருதயத்தில் மோசமான எண்ணமுடையவர்கள், அவர்களிடம் கசப்பான அல்லது இரக்கமற்ற விஷயங்களைச் சொல்வதில் மிகவும் சிறிதளவே சிரமப்படுவார். "**நாம், எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்.**" (யாக். 3:2).

நாவு மிகவும் பயனுள்ள உறுப்புகளில் ஒன்றாக இருந்தாலும், அதன் மீது கட்டுப்படுத்தும் கருவியாக, ஒரு கடிவாளத்தை வைப்பது அவசியம். நாவினால் நாம் நமது தேவனை கனப்படுத்தலாம் அல்லது நாம் அவரை நிந்திக்கலாம். நமது தலைப்பு வாக்கியம் குறிப்பிடுவது போல, நாம் நீதிமான்களுடன் இருப்பதை விட துன்மார்க்கர் முன்னிலையில் இருக்கும்போது, இன்னும் அதிக கவனமாக இருக்க வேண்டும்; ஏனெனில் துன்மார்க்கரின் போக்குகளும் எண்ணங்களும் பொல்லாப்பை நோக்கியே இருக்கும். அப்படிப்பட்ட சமயங்களில், அனுதாப மனப்பான்மை உள்ள சிலர் தங்கள் நாவினைக் கட்டுப்படுத்துவதில் பெருமளவில் சிரமப்படுவதைக் காணலாம்; ஆகையால், துன்மார்க்கரிடம் நல்ல விஷயங்களைப் பேசுவதை விட, நீதிமான்களிடம் சுதந்திரமாய் இருப்பதாக தோன்றும் செயலை செய்வது நல்லது. "**பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்: உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்: போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்**" (மத். 7:6) என்று நம் ஆண்டவர் அறிவுறுத்தியுள்ளார்.

உலகில் தீய மனப்பான்மை கொண்டவர்களைத் தவிர, வேதத்தின் அடிப்படையில் துன்மார்க்கர்கள் என்று அழைக்கப்படும் மற்றொரு வகுப்பார் உள்ளனர், அவர்கள் கர்த்தரைப் பற்றி அறிந்தவர்கள், ஆனால் அவருக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்த ஜனங்கள். யூதாஸ் இந்த வகுப்பைச் சேர்ந்தவன், "**அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்.**" (மத். 26:24). இந்த எதிர்மறையான மனநிலையில் இருப்பவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். புரிந்து கொள்ளுதலின் பரிசுத்த ஆவியின் பங்காளிகளாக இருந்து, "**வழியும், சத்தியமும், ஜீவனும்**"–மாகியவற்றிற்கு (யோவா. 14:6; எபி. 6:4-6; 2 பேது. 2:1) முதுகைத் திருப்பியவர்களைப் போல வேறு யாரும் மிகவும் அவநம்பிக்கையானவர்களாகவும், வெறுக்கத்தக்கவர்களாகவும் இருப்பதாகத் தெரியவில்லை. அத்தகையவர்கள் மற்ற பொல்லாதவர்களை விட மிகவும் பொல்லாதவர்களாகத் தோன்றுகிறார்கள், ஏனென்றால் அவர்கள் பிரகாசிப்பிக்கப்பட்ட வெளிச்சத்திற்கு எதிராக பாவம்

செய்து மிகவும் கண்டனத்திற்குரிய மனப்பான்மையில் இருக்கிறார்கள். நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும், இவர்கள் நம் வார்த்தைகளை திரித்து, நாம் சொல்லாததை சொன்னதாகக் கூறி, நமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வார்கள்.

வேதாகமத்தின் எச்சரிப்பு நாவுக்கு மாத்திரம் எதிரானது அல்ல, மாறாக நமது நாவைத் தவறாகப் பயன்படுத்தி மற்றவர்களுக்கு எதிராக நாம் பிரயோகிக்கும் வல்லமைக்கு எதிரானது. நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ, சரீரத்தின் மற்ற அவயவங்களைத் தாண்டி நாவு அதன் தாக்கத்தில் ஆற்றல் வாய்ந்தது என்ற கூற்றை அனுபவமுள்ள ஒவ்வொரு நபரும் முழுமையாக ஏற்றுக் கொள்வார்கள். ஆம், ''**எலும்பு இல்லாததால் நாவு பல திசைகளிலும் அசைய முடியும்.**''

## நாவின் அதிகாரத்தைப் பற்றி யாக்கோபு சாட்சியளிக்கிறார்

''**கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்.**'' (சங். 141:3). அப்போஸ்தலனாகிய யாக்கோபும் (3:1-12) நாவின் அதிகாரத்தைப் பற்றிய தெளிவான விளக்கத்தைத் தருகிறார். அவர் இவ்வாறு அறிவிக்கிறார், ''**நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்**'' (வசனம் 2, ARV). இவர்கள் கிறிஸ்தவ வளர்ச்சியில் இனி குழந்தைகளாக அல்ல, பெரியவர்களாக இருப்பார்கள், அவர்களின் வளர்ச்சி விகிதத்தில் திறமையற்றவர்களாக அல்லாமல், ஆனால் நாவினை பொதுவாகக் கூறுவ-தென்றால், தங்கள் இயல்பில் மிகவும் கலகத்தனமான பகுதியைக் கட்டுப்படுத்துவதில் திறமையானவர்கள். ஆகையால் அவர்கள் தங்களின் குறைவான பொல்லாப்பு செய்யும் உறுப்புகளையும் அதாவது அவர்களின் கைகள், கால்கள், கண்கள், காதுகள், உண்மையில், முழு சரீரத்தையும். கட்டுப்படுத்துவதில் ஒப்பீட்டளவில் அவர்-களுக்கு குறைந்த சிரமமே இருக்கும் - இதன் மூலம் அவர்கள் முதிர்ந்த, நன்கு வளர்ந்த பாத்திரங்கள் என்பதை நிரூபிக்கிறார்கள், அவர்களிடத்தில் பொறுமை தனது பரிபூரணப் பணியைச் செய்து வருகிறது, அதனால் அவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவைப் போல படிகப்படுத்தப்பட்ட மனப்பான்மையைக் கொண்டவர்களாகவும், முழுமை-யானவர்களாகவும், பூரணமானவர்களாகவும் ஆகலாம், இது நிச்சயமாக ஒரு வேதாகம சிந்தனையாகும் (யோவா. 17:23; எபி 13:21; 1 பேது.5:10; 1 யோவா. 4:17, 18; சி - 6 பக்கம் 345, அடிப்பகுதி).

நம்முடைய விழுந்துபோன மாம்சீகத்தில், சிந்தனை, வார்த்தை மற்றும் செயல் ஆகியவற்றில் பாவத்திலிருந்து விடுபட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது (1 யோவா. 1:8); ஆனால் நாம் கர்த்தருக்கு விசுவாச உண்மைத்துவமாக இருப்பது, மற்றும் அவருடைய அங்கீகாரத்தைப் பெறுவது என்பது நாம் நமது சரீரத்தைக் கீழ்ப்படுத்தி, அவருக்கு பிரியமானதைச் செய்யக் கீழ்ப்படுத்தும் விகிதாசார அளவுக்கு தக்கதாக இருக்கும் (1 கொரி. 9:27). நம்மைக் கட்டுப்படுத்தும் அதன் முயற்சிகளை நாம் கடுமையாக எதிர்க்கும் போது சரீரத்தை அடக்கி வைக்கிறோம்; நாம் அதைப் பிடித்து, தேவனுடைய சித்தத்தைச் செய்யும்படி வற்புறுத்தும்போது அதைக் கீழ்ப்படுத்துகிறோம். நாம் ''**பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துப் போட்டு**'' மேலும் ''**புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக் கிறீர்களே**'' (கொலோ. 3:9,10), ''**இருதயத்தில் மறைந்திருக்கிற குணம்**'' (1 பேது. 3:4) ஆகியவற்றைக் கொண்டு, நாம் ஜெயங்கொள்பவர்களாக ஆக முடியும்; நமது கர்த்தர் ''**நல்லது, உத்தமமும் உண்மையுள்ள ஊழியக்காரனே**'' எனக் கூறுவதையும் எதிர்பார்க்கலாம்.

நம்முடைய சரீரத்திலுள்ள உறுப்புகளில் மிகவும் செல்வாக்குமிக்கதும், தேவனுடைய சித்தத்தை மட்டுமே செய்வதற்கு நாம் கட்டுப்படுத்துவதற்கும் கீழ்ப்படுத்து-வதற்கும் மிகவும் கடினமான உறுப்பு நாவாகும். ''**உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று** [பக்தி, பரிசுத்தம்] **எண்ணினால் அவனுடைய தேவபக்தி** [தேவனிடம் கொண்டிருக்கும் பயபக்தி, அன்பு] **வீணாயிருக்கும்** [பயனற்ற, லாபமற்றதாயிருக்கும்].'' (யாக். 1:26). தேவன் மீதான அவனது பயபக்தி உண்மையானதாக இருந்தால், அது கிறிஸ்தவ கடமைகள் மற்றும் பாக்கியங்களை தங்களின் வழக்கமான காரியமாய் கருதி நிறைவேற்றுவதில் நடைமுறை வடிவம் பெறும்; ஏனெனில் ''**கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது.**'' (யாக். 2:20).

## குதிரைகள் மற்றும் கப்பல்கள் எடுத்துக்காட்டுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன:

அப்போஸ்தலன் யாக்கோபு 3:2-ல் அவரது தனித்துவமான முறையில், வெளிப்படுத்தியதை, அழுத்த-மாக கூறுவதற்கு எடுத்துக்காட்டுகளுக்காக இயற்கைப் பொருட்களை நோக்கி திரும்புகிறார். ஒரு மனிதன் தன்னுடைய நாவை அடக்க முடிந்தால், குதிரையின் வாயை மட்டுமல்ல, அந்த முழு மிருகத்தையும் கட்டுப்படுத்தும் கடிவாளம் போல, அவன் தனது முழு சுபாவத்தையும் கட்டுப்படுத்தலாம். இந்த முதல் உருவகம் (வசனம் 3) அப்போஸ்தலரின் சொந்த மொழியால் பரிந்துரைக்கப்பட்டது. அவர் தனது முழு சரீரத்தையும் கட்டுப்படுத்தும் பூரண மனிதனைப் பற்றி இப்போதுதான் (வசனம் 2) பேசினார், முன்பு அவர் (1:26)-ல் தனது நாவினைக் கட்டுப்படுத்தாத ஒருவருக்கு உண்மையான மற்றும் நேர்மையான தேவ பக்தி சாத்தியமற்றது என்று பேசினார்; மேலும் இது பொதுவாக குதிரைகளைப் பற்றிய எடுத்துக்காட்டை அறிவுறுத்துகிறது.

## நாவின் வல்லமை

அன்பு – வெறுப்பு
நகைப்பு – கண்ணீர்
துதி – ஊக்கமழிப்பு
குணமடைதல் – காயமடைதல்
ஜீவன் – மரணம்
பாடங்கள் – விரிவுரைகள்
விசுவாசம் – பயம்
நம்பிக்கை – நம்பிக்கையின்மை
தாழ்மை – பெருமை
உண்மை – பொய்கள்
கண்ணியமான பேச்சு – சபித்தல்
கட்டியெழுப்புதல் – வீழ்த்துதல்
தேவனைத் துதித்தல் – தேவனை பரியாசம் செய்தல்

**நினைவில் கொள்க – நாவு வெறுமனே சுவைப் பதற்காக மட்டுமல்ல, அதற்கும் மேலானவை– களுக்கு அது பயன்படுத்தப்படுகிறது**

''**குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்போட்டு** [உதாரணமாக, கடிவாளத்தின் ஒரு பகுதி bit-பிட் என்று அழைக்கப்படுகிறது], **அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்.**'' (வசனம் 3, ARV). இன்னும் வலுவான மற்றொரு உதாரணம்: ''**கப்பல்களையும்** [படகுகள் கூட] **பாருங்கள், அவைகள் மகா பெரியவை–களாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்**'' (வசனம் 4, ARV). குதிரையைக் கட்டுப் படுத்துகிற கடிவாளம் போலவும், கப்பலைக் கட்டுப்படுத்துகிற சுக்கான் போலவும், தன் நாவினை கட்டுப்படுத்தும் மனிதன் தனது முழு சரீரத்துக்கும் எஜமானன்; ஒப்பீட்டளவில் இது மிகவும் சிறியதாகவும், அதன் பயன்பாட்டில் மிகவும் ஆற்றல் வாய்ந்ததாகவும் இருக்கிறது.

இங்கே தர்க்கரீதியான விளக்கக்காட்சியை நாம் கவனிக்கிறோம் மற்றும் அனைத்தும் சேர்ந்து ஒரு உச்சகட்டத்தை உருவாக்குகிறது: முதலில் உதாரண வாக்கியம் (வசனம் 2), பின்னர் குதிரைகளைப் பற்றிய விளக்கம் (வசனம் 3), பின்னர் ''**கப்பல்களும் கூட**'' (வசனம் 4), இறுதியாக ''**அப்படியே நாவும்**'' (வசனம் 5) என்று உள்ளது. நிச்சயமாக, பகுத்தறிவற்ற குதிரைகளை சிறிய கடிவாளம் மூலம் அடக்க முடிந்தால், நாவினை அடக்குவதன் மூலம் நாம் எவ்வளவு அதிகமாக நம்மை நாமே கட்டுப்படுத்த முடியும்; ஏனென்றால், குதிரையைக் கட்டுப்படுத்தும் கடிவாளத்தை இழந்தவன் குதிரையின் மீதான கட்டுப்பாட்டை இழந்துவிட்டதைப் போல, நாவினை கட்டுப்படுத்த முடியாதவன் தன்னுடைய கட்டுப்பாட்டை இழந்து விடுகிறான்.

கப்பலைப் பற்றிய காரியம் இன்னும் வலுவாக உள்ளது. கப்பல் பகுத்தறிவு இல்லாதது மட்டுமல்ல, ஜீவனற்றது. கீழ்ப்படிதலைக் கற்பிக்க முடியாது. அதன் மிகப் பெரிய அளவு காரணமாகவும், கடுமையான காற்றினால் இயக்கப்படுவதாலும் இது மிகக் கடுமையான எதிர்–வினையை வழங்குகிறது, இருப்பினும் அதன் முழு நிறையையும் சிறிய சுக்கானின் கட்டுப்பாட்டை வைத்–திருக்கும் எவராலும் திருப்பிட முடியும், ஆனால் அதன் கட்டுப்பாட்டை இழப்பது அனைத்தையும் இழப்பதாகும். ஆகவே, நம் நாவின் மீது கட்டுபாடு கொள்வதன் மூலம் நாம் நம்மீது எவ்வளவு அதிகமாக ஆளுகையைக் கொண்டிருக்கமுடியும்! ''**தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்.**'' (நீதி. 21:23).

கடிவாளம் மற்றும் சுக்கான் போன்று நாவும், ''**ஒரு சிறிய அவயவம்**'' (வசனம் 5) மட்டுமே, மொத்தத்தில் அது மிகச் சிறிய அங்கம் மாத்திரமே, இருப்பினும், அது பெரிய காரியங்களைச் செய்ய முடியும். அப்போஸ்தலனாகிய யாக்கோபு, நாவானது ''**பெரிய காரியங்களைச் செய்–வதற்குப்**'' பதிலாக, ''**பெருமையானவைகளைப் பேசும்**'' என்று கூறுகிறார், விவாதத்தை கெடுத்துவிடும்படியாக, அது செய்ய முடியாததையோ அல்லது செய்யாததையோ குறித்து பெருமைப்படுவதாக கூறாமல், மாறாக விவாதத்தின் மையப்பொருளில் மாற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில் செயல்படும் என்கிறார்.

முந்தைய கூற்றானது, பேசக்கூடிய நம்முடைய சிறிய அவயவமானது நமது முழு சரீரத்திலும் அபரிமிதமான தாக்கம் கொண்டிருக்கும் என்றும், அதன் விளைவாக நாம் அதனைக் கட்டுப்படுத்த தேவைப்படும் போது அதைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இருந்தது என்றும் வலியுறுத்துகிறது. சரியான இடத்தில் இக்கட்டுப்பாட்டைத் தொடங்க நாம் கவனமாக இருக்க வேண்டும். இந்தக் கூற்று நடைமுறைப்படுத்தப்பட்டால், விவாதம் சற்றே வித்தியாச–மான திருப்பத்தை எடுக்கிறது, அதாவது நாவினைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் அதன் பெரும் சக்தியினால் அல்ல, மாறாக அதன் உள்ளார்ந்த வெறுக்கத்தக்க தன்மையினால் காட்டப்படுகிறது. அது நல்ல விஷயங்களைக் கொடுக்க செய்யப்படலாம், ஆனால் அதன் இயல்பான சாயல் தீமையை நோக்கியே உள்ளது. கண்காணிக்கப்படாமல் விட்டால், நிச்சயமாக அது பெரும் குழப்பத்தை உண்டாக்கும். ''**பெருமையானவைகளைப் பேசும்**'' என்ற விளக்கமானது ஒரு கருத்திலிருந்து மற்றொன்றுக்கு மாறுவதைக் குறிக்கிறது, எனினும் ஓரளவில் அவை இரண்டும் ஒருங்கிணைந்துகொள்கிறது. ஒன்று இங்கே பெரிய காரியங்கள் செய்யப்படுகின்றன – இது நாவின் அதிகாரத்தைக் காட்டுகிறது; மற்றொன்று அது அவர்களைப் பற்றி பெருமை பேசுகிறது – இது அதன் மோசமான குணத்தைக் காட்டுகிறது.

## நெருப்பு ஓர் எடுத்துக்காட்டாக

இந்த இரண்டாவது குறிப்பும், முதல் விஷயத்தைப் போலவே, இயற்கையிலிருந்து எடுக்கப்பட்ட இரண்டு

எடுத்துக்காட்டுகளால் வலியுறுத்தப்படுகிறது. முதலாவது கடிவாளங்கள் மற்றும் சுக்கான்களின் சக்தியால் விளக்கப் பட்டது; இரண்டாவது தீங்கு விளைவிக்கும் திறன் கொண்ட நெருப்பு மற்றும் காட்டு விலங்குகளினால் விளக்கப் பட்டுள்ளது. ஒரு காடு முழுவதையும் எரிக்க எவ்வளவு விறகு போதுமானது? உண்மையில் நெருப்பு ஒரு நல்ல வேலைக்காரன், ஆனால் ஒரு மோசமான எஜமானன் என்று கூறப்படுகிறது, மேலும் துல்லியமாக அதே அளவிலான உண்மையை நாவினைப் பற்றியும் கூறலாம். அதைக் கட்டுக்குள் வைத்திருக்கும் வரை, அது சிறந்த சேவையைச் செய்கிறது. ஆனால் கட்டுப்படுத்தப்படாவிட்டால், அது சொல்லொண்ணாத் தீமைகளை விளைவிக்கும். யாருடைய நாவுகள் தங்களுடன் அலப்புகின்றனவோ, அவர்களின் அடக்கப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற நாவுகள் சரியாக சிந்திக்கப்படாத அல்லது சரியாக அர்த்தப் படுத்தப்படாத விஷயங்களைக் கூறுகின்றன.

‘‘**பெரிய விஷயங்களை**’’ பேசும் பழக்கம் மற்றும் கடுமையான மொழியைப் பயன்படுத்துவது நிரந்தரமான ஆபத்தின் நிலையாகும், இது தவிர்க்க முடியாமல் பேச்சாளரை தீமைக்கு இட்டுச் செல்லும். இது மிகவும் ஆபத்தான பொருட்களை பொறுப்பற்ற முறையில் கையாளும் விதத்தைப்போன்றது. அது நெருப்புடன் விளையாடுவது. ‘‘**நெருப்பு காட்டைக் கொளுத்துவதுபோலவும், அக்கினி ஜுவாலைகள் மலைகளை எரிப்பதுபோலவும்**’’ (சங். 83:14-ஐசக் லீசர்), கட்டுப்படுத்தப்படாத நாவுமாகும். இருதயம் பொல்லாததாயிருந்தால், ‘‘**ஆகாமியமானது அக்கினியைப்போல எரிகிறது: அது முட்செடியையும் நெரிஞ்சிலையும் பட்சிக்கும், அது நெருங்கிய காட்டைக் கொளுத்தும், புகை திரண்டு எழும்பும்**’’ (ஏசா. 9:18). கட்டுப்படுத்தப்படாத நாவு நெருப்பைப் போன்று பெரும் அழிவைக் கொண்டுவருகிறது.

ஆம், ‘‘**நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்: நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்துகிறது**’’ (வசனம் 6, ARV). ‘‘**நம்முடைய அவயவங்களுக்கிடையே அநீதி நிறைந்த உலகம்**’’ என்று அழைக்கப்படத்தக்க அளவுக்கு நாவில் பாவம் மிகுதியாக இருக்கிறது. இது எத்தனை சவால்களை உண்டாக்குகிறது! எத்தனை பயங்கரமான தீப்பிழம்புகளை தூண்டுகிறது! இந்த கட்டுக்கடங்காத அவயவத்தால் கறைபடுத்தும் உணர்வுகள் தூண்டப்பட்டு, வெளிப் படுத்தப்பட்டு, பெரும் வினையை நிகழ்த்துகிறது. மேலும் முழு சரீரமும் நாவினால் அடிக்கடி பாவத்திலும் குற்றத்திலும் சிக்குண்டு இழுக்கப்படுகிறது. ஆகையால், பூமியிலிருந்த ஞானியான சாலொமோன் இவ்வாறு கூறுகிறார்: ‘‘**உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே.**’’ (பிர. 5:6).

நாவினால் எரிக்க முடியாத, சரீரத்தின் மற்ற பாகங்களில் நாம் சோதிக்கப்படும்படியான எந்த பாவமும் இல்லை. நாவானது, பாவத்தின் விவரங்களை வலியுறுத்தவும், அதில் வாசம்பண்ணவும் முடியும். இது நினைவாற்றலைக் கவருகிறது, உணர்ச்சிகளை ஆழமாக்குகிறது,




மேலும் கற்பனையை உயிர்ப்பூட்டுகிறது, பாவத்தை ஆதரிக்கிறது. இது கொஞ்சம் கடுமையான விளைவை ஏற்படுத்தும் பாவத்தை அடிக்கடி மன்னிக்கிறது. அது அதை அலங்கரித்து, அழகுபடுத்துகிறது, மனிதர்கள் அதைப் பாராட்ட கற்றுக்கொடுக்கிறது. எனவே, இது சரீரத்தின் மற்ற பகுதிகளை அசுத்தமாக்குகிறது. மேலும் அது தனது சொற்பொழிவு மற்றும் திறமையான பேச்சின் ஆற்றலுக்கு ஏற்ப அதிகமாகச் செய்கிறது.

நாவானது இயற்கை (ஆயுள்) சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், ‘‘**நரக** [கெஹென்னா] **அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!**’’ (வசனம் 6, ARV). நாவு என்பது பொல்லாப்புகளை வெளிப்படுத்தும் ஒரு மையம் என்பதே இங்குள்ள முக்கிய சிந்தனையாகத் தெரிகிறது. ஒரு சக்கரத்தின் அச்சில் தீப்பிடித்து, சுற்றுப்புறத்திற்கு தீக்கதிர்களினால் நெருப்பு பரப்பப்படுவதால், கடைசியில் முழுவதுமாக எரிந்து விடுகிறது. சமுதாயத்திலும் அப்படிதான் இருக்கிறது. பல்வேறு வழிமுறைகள் மற்றும் வகுப்பார்களினால் வதந்திகள் மூலம் தூண்டப்பட்ட உணர்ச்சிகள் மனித வாழ்க்கையின் முழு சுழற்சியும் நெருப்பில் அழியும் வரை வேகமாக பரவுகிறது. வாய்மொழியாகவோ அல்லது எழுத்தின் மூலமாகவோ பயன்படுத்தும் பொறுப்பற்ற வார்த்தை முதலில் அதைப் பயன்படுத்துபவரின் ‘‘**முழு இயல்பையும் தீட்டுப்படுத்துகிறது**’’ பின்னர் சமூகத்தின் பரந்த இணைய திறன்களின் மூலம் வெகு தொலைவிற்கும் அழிவை ஏற்படுத்துகிறது. மேலும் இதற்கு வரம்புகள் இல்லை; அடையாளமான எரியக்கூடிய பொருள் இருக்கும் வரை, நெருப்பு எரிந்து கொண்டே இருக்கும். கவனக்குறைவான வார்த்தைகள், சைகைகள், குறிப்புகள், அண்டை வீட்டாரின் அல்லது நண்பர்களின் மனதில் விழுந்துவிடுகின்றன, மேலும் இவர்கள் ஏற்கனவே தீய எண்ணம், பொல்லாத கண்ணோட்டம் போன்றவற்றுக்கு ஆளாகியிருப்பதால், இந்த வார்த்தைகள் பெட்ரோலுடன் கலந்த தீவட்டிகள் போன்றது - இது அண்டை வீட்டாருக்கு அல்லது நண்பருக்கு அளவிட முடியாத காயத்தை ஏற்படுத்தக்கூடிய பெரிய குழப்பத்தை தொடங்குவதற்கு ஏற்றது, மேலும் அவரிடமிருந்து தீப்பொறிகள் வெகுதூரம் பறந்து, சன்மார்க்க மற்றும் ஆவிக்குரிய அழிவை ஏற்படுத்தும்.

தொட்டில் முதல் கல்லறை வரை இயற்கையின் போக்காகிய, இந்த வாழ்க்கைச் சக்கரம், எந்த நேரத்திலும்

எளிதில் நெருப்பினால் தீப்பிடித்து எரியலாம். ஆயிரக் கணக்கான வாய்ப்புகள் உள்ளன. நாவு பொருத்தமானதாக உள்ளது. அநேகமாக, அப்போஸ்தலன் யாக்கோபு குறிப்பாக பிரதிஷ்டை செய்த பிள்ளைகளின் செயல்களையும் இதன் ஆபத்துகளையும் மனதில் வைத்திருந்தார். அது நெருப்பினால் கொளுத்தப்பட்டு, முழு ஆவிக்குரிய வாழ்க்கையும், எதிர்காலமும் சிதைந்து, அழிக்கப்பட்டால் என்ன செய்வது! ''**கெஹன்னாவின் அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது**'' என்ற வார்த்தைகளால் அவருடைய எண்ணம் இதுவாகத் தெரிகிறது.

ஒருவரின் நாவு கெஹன்னா அக்கினியினால் கொளுத்தப்படுவதென்பது, சுய–சித்தம், சுயநலம், வெறுக்கத்தக்க மற்றும் தீங்கிழைக்கும் மனப்பான்மையால் தீமை செய்ய தூண்டுவதைக் குறிக்கிறது; ஞானமும் சந்தர்ப்பமும் இருந்த போதிலும், இது சீர்திருத்தப்பட்டு கட்டுப்படுத்தப்படாவிட்டால், அழிக்கப்படுவதற்கு தகுதியான தாகக் கருதப்படுவார்கள், அது கெஹன்னா[இரண்டாம் மரணத்தின் அடையாளம், அதிலிருந்து மீளுவதற்கான நம்பிக்கை இல்லை] நோக்கம் கொண்ட வகுப்பாரை உருவாக்கும். இப்படிப்பட்ட மனப்பான்மை கொண்ட ஒருவர் தன் நாவினால் ஒரு பெரிய நெருப்பை, அதாவது அழிவுகரமான குழப்பத்தை உண்டாக்கி, அது எங்கு தொடர்பு கொண்டாலும், இயற்கையின் போக்கு முழுவதிலும் தீங்கு செய்யும். ஒரு சில தீய வார்த்தைகள் அடிக்கடி பேசுபவரின் பொல்லாத உணர்ச்சிகளைத் தூண்டி, மற்றவர்களிடமும் அதையே உருவாக்குகிறது, மேலும் அது தனக்குதானே எதிர்வினையாற்றுகின்றது; அத்தகைய தீய போக்கினை தொடர்பவர்களை அது இறுதியில் முழுமையாக சிதைத்து, ஜீவனுக்கு முற்றிலும் தகுதியற்ற தண்டனையின் கீழ் கொண்டுவருகிறது.

ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு தீங்கு விளை–விக்கும் தகவல் தொடர்புகள் மற்றும் பிற உருவக தீப்பொறிகளுக்கு எதிராக கவனமாக இருக்க வேண்டும், அதே நேரத்தில் தீங்கிழைக்கும் தீப்பொறிகள் தன் மீது விழுந்து தனது இருதயத்தில் பற்றிவிட அனுமதிக்காமல் கவனமாக இருக்க வேண்டும். தீயை அணைக்கும் கருவி, சத்திய வசனமாகிய தண்ணீர் மற்றும் அதன் ஆவி, தொடர்ந்து நமது கரத்தில் இருக்க வேண்டும், இதனால் எரியும் நெருப்பின் தீப்பொறி தாக்கம் காயம் அடைவதற்கு முன்பு அணைக்கப்படும். ''**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்**'' என்பது மற்றவர்களுக்கு தீமையை, தீய தீப்பொறிகளைக் கொடுக்காமல் இருப்பது மட்டுமல்லாமல், எந்தத் தீமையும் அங்கு தோன்றாமல் அல்லது ஏற்படாமல் பார்த்துக் கொண்டு, நம் இருதயத்தைக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை உணர்த்து கிறது. நம் தலைக்கு மேல் காகங்கள் பறக்காமல் தடுக்க முடியாது, ஆனால் அவைகள் நம் தலைமுடியில் கூடு கட்டாமல் தடுக்க முடியும் என்ற பழமொழியை நினைவில் கொள்வோம். கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி, கிறிஸ்தவர்களாக இல்லாவிட்டாலும் சரி, தீய எண்ணம்




கொண்டவர்களிடமிருந்து உலகை நாம் விடுவிக்க முடியாது, ஆனால் அவர்களுடன் கூட்டுறவு கொள்வதைத் தவிர்க்கலாம், அப்போஸ்தலனாகிய பவுல் அறிவுறுத்தியபடி, ''**அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.**'' (ரோம. 16:17). ஆம், அவற்றைத் தவிர்க்கவும், அத்தகைய சண்டையிடும், பரிசுத்தமற்ற ஆவிக்கு நீங்கள் அனுதாபம் காட்டவில்லை என்பதையும் அவர்களுக்குக் காட்டுங்கள். ''**துன்மார்க்கர்களின் தவறு–களை**''ஆராய்வதில் நேரத்தை வீணாக்காதீர்கள், யேகோவா தேவனுடன் எவ்வளவு நெருக்கமாகப் பழகுகிறோமோ, அந்த அளவுக்கு நம்முடைய சொந்த ஸ்திரத்தன்மையில் நாம் பாதுகாப்பாக இருக்கிறோம்!

## எடுத்துக்காட்டுகளாக காட்டு விலங்குகள்

தீய நோக்கங்கொண்ட நாவினைக் காட்ட அப்போஸ்–தலனாகிய யாக்கோபு (3:7,8) பயன்படுத்திய இரண்டாவது எடுத்துக்காட்டு நாவின் தீங்கு விளைவிக்கும் விருப்பத்தை காட்ட போதுமானதாக இருக்கிறது. எல்லா வகையான உயிரினங்களும் – நடக்கிற, பறக்கிற, ஊர்ந்து செல்பவை நீந்தக்கூடியவை அனைத்தும் – அடக்கக்கூடியவை; அவை மனிதனால் அடக்கப்பட்டும் வருகின்றன; ஆனால் மனிதனின் கலை, திறமை மற்றும் தைரியம் ஆகியவற்றால் கீழான மிருகங்களை அடக்கி அவற்றை சேவை செய்யக்கூடியதாக மாற்றும் போது, அவனால் தன் நாவினை அடக்க முடியவில்லை – அது ''**அடங்காத தீமை, கொடிய விஷம் நிறைந்தது,**'' ஒரு விஷப்பாம்பை விட மோசமானது மற்றும் அதிக விஷமானது. எந்த பாம்பு கடியிலும் இவ்வளவு ஆபத்தான மற்றும் கொடிய விஷம் இல்லை. பாம்பு கடியானது வலி மற்றும் சரீர ரீதியான மரணத்தை ஏற்படுத்தலாம், ஆனால் நாவு இன்னும் பலவற்றைச் செய்ய முடியும்: அது ஒழுக்க சீர்கேட்டை உண்டாக்கும், அது மற்றவர்களைக் கடித்து, விழுங்கி, மதியிழக்கச் செய்யும், மேலும் அதன் தாக்கம் நித்தியமான மரணம் வரை நீண்டு கொண்டே செல்கிறது. ''**தடைகட்டப்படாத பாம்பு கடிக்குமே, அலப்புவாயனும்** [எபிரேயம் – நாவின் சொந்தக்காரன்] **அதற்கு ஒப்பானவன்**'' (பிர. 10:11). தன்னுடைய வீழ்ச்சியடைந்த நிலையில் வீணாக பேசி

அலப்புபவருக்கு சுயகட்டுப்பாடு இல்லை என்பதன் அளவுகாட்டியாக அவனுடைய நாவு உள்ளது.

நாவை யாராலும் அடக்க முடியாது என்று அப்போஸ்தலர் கூறவில்லை, ஆனால் ''**நாவை அடக்க எந்த ஒரு மனுஷனாலும் கூடாது**'' என்று கூறுகிறார். அதை சரியான எல்லைக்குள் வைத்திருக்க அவருக்கு மனித ஆற்றலுக்கு மேற்பட்ட கிருபையும் ஒத்தாசையும் தேவை. குதிரைகளும், ஒட்டகங்களும், யானைகளும் தங்களைத் தாங்களே அடக்கிக் கொள்வதில்லை; மனிதனும் அப்படிதான். மனிதன் மிருகத்தை அடக்குகிறான், ஆனால் தேவன் மனிதனை அடக்குகிறார்; ''**ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.**'' (பிலி. 2:13). தேவனுடைய உதவியுடன் புதிய இருதயம், மனம் மற்றும் சித்தத்திற்கு நாவினைக் கட்டுக்குள் கொண்டு வர முடியும். அதை சரிபார்க்க முடியும், ஒழுங்குபடுத்த முடியும், நல்ல மற்றும் பயனுள்ள விஷயங்களை பேசக் கற்றுக்கொடுக்க முடியும், ஆனால் அதை ஒருபோதும் நம்பக்கூடாது. கண்காணிப்பு மற்றும் விழிப்புடன் இருப்பதை ஒதுக்கி வைத்தோமானால், அதன் தீய குணம் மீண்டும் வெடிக்கும், அதன் விளைவுகள் பேரழிவைத் தரும்.

## பொறுப்பற்ற நாவு குழப்பத்தை ஏற்படுத்துகிறது

யாக்கோபு 3:9-12-ல், தன் நாவை அடக்கத் தவறும் கிறிஸ்தவர்கள் எவ்விதமான ஒழுக்கக் கேடுகளுக்குள்ளா-கிறார்கள் என்பதை அப்போஸ்தலன் காட்டுகிறார், மேலும் அப்படிப்பட்ட ஒருவர் பரலோகப் பிதாவுக்குச் செய்யும் ஆராதனை பரிசுத்தமானது மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்கது என்று நம்புவது அத்தகையவருக்கு எவ்வளவு வீணானது என்பதை அவர் காட்டுகிறார். ''**இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது**'' (மத். 6:24). தேவனைத் துதித்து (கனம், துதி), ''**தேவனுடைய சாயலின்படி** [உண்மையாகவே] **உண்டாக்கப்பட்ட மனுஷரை**'' (வசனம் 9), சபிக்குமொரு (காயங்கள், அவதூறுகள், தீமைகள்) மனிதர், ராஜரீக குடும்பத்தை அவமதிப்பதாகவும் அதே வேளையில் ராஜாவை மதிப்பதாகவும் கூறுவதுபோல் உள்ளது. இது போன்ற குழப்பமான செயல்களுக்கும், அத்தகைய சன்மார்க்க முரண்பாட்டிற்குள்ளும் தன்னையே இழுத்து செல்லும் திறன் கொண்டது என்பதும் நாவின் தீய தன்மைக்கு மற்றொரு சான்றாகும். இதையும் தாண்டிய மற்றொரு உண்மையான மற்றும் சன்மார்க்க முரண்பாடு உள்ளது என்பதை அப்போஸ்தலன் யாக்கோபு நமக்குக் காட்டுகிறார்: ''**துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது**'' (வசனம் 10). அன்பான மனோபாவத்துடன், ''**என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது**'' என்று மேலும் அவர் கூட்டுகிறார். ஆனால் நாம் இவ்வாறாக அடிக்கடி கண்டு கொள்கிறோம்!

தேவன் மீது முழு பயபக்தியாய் இருப்பதாகக் கூறும் நபர்கள், தங்களிலிருந்து மாறுபடும் அவருடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பதற்கும், கண்டிக்கவும், கண்டனம் செய்வதற்கும் முயற்சி செய்வதைக் காட்டிலும், அவருடைய தனிச்சிறப்புகளை பெற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறார்கள் என கூறிவிட முடியாது. ''**தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறேன்: ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்**'' (ரோம. 10:2, 3, ARV). பிலேயாம் செய்ய மறுத்ததிலும், தேவதூதர்கள் அடியெடுத்து வைக்க பயந்த இடத்திலும் கூட அவர்கள் விரைகிறார்கள் (PT '81 p.27); இவ்வாறு, தேவன் சபிக்காதவர்களைச் சபிக்கிறார்கள், கர்த்தர் நிந்திக்காதவர்களை நிந்திக்கிறார்கள் (எண். 23:8). தேவனுடைய பிள்ளைகளைப் பற்றித் தீமையாகப் பேசி, இகழ்ந்து, எப்போதும் பாவம் செய்துகொண்டிருக்கும் ஒருவரின் வாயில் தேவனைப் பற்றிய துதி பொருத்தமானதாக இராது. (1 யோவா. 4:20, 21 பார்க்க).

தீமைக்கேதுவான நாவின் வலிமையான சாத்தியக்-கூறுகளைப் பற்றிய சரியான கருத்தை நாம் புரிந்து-கொண்டால், நாம் ஒரு வார்த்தை பேசுவதற்கு கூட பயப்படுவோம், மேலும் தவறாக பேசமாட்டோம். உண்மை, நீதி, அன்பு மற்றும் நிதானமான வார்த்தைகளை மட்டுமே பேசுவதற்கு இது போன்ற பயம் நமக்கு மிகவும் உதவியாக இருக்கும்; தீமையைப் பற்றிய பயம் நமது ஒவ்வொரு உணர்ச்சிகளின் வெளிப்பாட்டையும் பாதுகாக்கும் அதே சமயம், நற்செய்திகள் கட்டுப்பாட்டை உடைத்து, வார்த்தைகளைக் கண்டுபிடிக்கும். இதன் விளைவாக அதிகமாக தெய்வீக சாயலை பெறுவோம். தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களாகிய நாம் அவரைப் புகழ்வதிலும், அவருடைய கிருபை, இரக்கம் மற்றும் அன்பை அறிக்கையிடுவதிலும், அவருடைய வார்த்தையின் விலைமதிப்பற்ற சத்தியத்திற்கு சாட்சி கொடுப்பதிலும் நமது நாவைப் பயன்படுத்துகிறோம். இதுவே சரியானது. இதற்கு மாறானதை நாம் எவ்வாறு செய்ய முடியும்? ஆனால், அந்தோ பரிதாபம்! இப்படி நம்முடைய பரலோக தகப்பனைத் துதிக்கும் அதே நாவு அடிக்கடி நிரூபிக்கிறபடி, தனக்கும் பிறருக்கும், குறிப்பாக விசுவாச வீட்டாரின் சக உறுப்பினர்களுக்கு ஓர் சாபம், காயம் மற்றும் அநீதி நிறைந்த உலகம் மற்றும் அவதூறுகள், தீமைகள், தீய எண்ணங்கள், குறிப்புகள், சூழ்ச்சிகள் போன்றவற்றால் ஆயுள் சக்கரத்தை கொளுத்திவிடுகிறது என்பது உண்மையாகவே இருக்கிறது.

''**என் சகோதரரே, இப்படி இருக்கலாகாது**;'' அவை பிரமாணத்திற்கும் இயற்கைக்கும் முரணானவை. கிறிஸ்துவின் பாடசாலையில் இந்த மகத்தான பாடத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும், அதாவது தேவனைத் துதிக்கும் வாயிலிருந்து சகோதரர்களுக்கோ அல்லது மற்றவர்-




களுக்கோ தீங்கு விளைவிக்கக்கூடிய எதுவும் வெளிவரக்கூடாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? (யாக்கோபு 3:11). இல்லை! ஒரே நீரூற்று தித்திப்பு மற்றும் கசப்பு இரண்டையும் கொடுக்க முடியாது, எனவே நாம் அத்தகைய மனநிலை கொண்டிருக்கும் வரை, தேவனுடைய அன்பான குமாரனின் மாதிரிகளாகவோ அல்லது ராஜ்யத்திற்கு தகுதியானவர்களாகவோ இருக்க முடியாது.

## எடுத்துக்காட்டுகளாக மரங்கள்

அப்போஸ்தலன் இந்த உவமையையும் எடுத்துக் காட்டை இயற்கையிலிருந்தும் மற்றும் அதன் தெளிவான முடிவை மற்றொன்றுடன் உறுதிப்படுத்துகிறார் - மரங்கள், ஒவ்வொன்றும் அதன் சொந்த வகையான பழங்களைத் தருகின்றன. "**என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா?**" (யாக். 3:12). நிச்சயமாக இல்லை! இது தேவனுடைய இயற்கை விதிக்கு முரணானது. எனவே, அப்போஸ்தலன் இவ்வாறு முடிக்கிறார், "**எனவே உப்புத்தண்ணீரையும் நன்னீரையும் தருகிற ஊற்று ஒன்றுமில்லை.**" (ARV; தொகுப்பு. மத். 7:16-18). உணர்ச்சியற்ற பொருட்களின் கீழ்நிலை வகுப்புகளில் சடத்துவ முரண்பாடுகள் அனுமதிக்கப்படாத நிலையில், பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களிலும் உயர்ந்தவற்றில் மிகவும் மோசமான தார்மீக முரண்பாடுகள் அனுமதிக்கப்படுகின்றனவா?

"**இருமனமுள்ள மனிதன்,**" ஜெபத்தில் சந்தேகம் கொள்கிறவன், கர்த்தரிடமிருந்து எதையும் பெறுவதில்லை, ஏனென்றால் அவனது விண்ணப்பம் ஒரு ஜெப வடிவத்தில் மட்டுமே உள்ளது; அது ஜெபத்தின் முக்கிய பண்பான, விசுவாசத்தைக் கொண்டிருக்கவில்லை (யாக். 1:5-8). ஆனால் தேவனைத் துதித்து, மனிதர்களை சபிக்கிற இரட்டை நாவுள்ள மனிதன் எதைப் பெறுகிறான்? இருமனம் கொண்டவன் அவனது சந்தேகங்களால் நியாயந் தீர்க்கப்படுகிறான், அவன் தனது ஜெபத்தின் விதங்களினால் அல்ல, இரட்டை நாவுள்ளவன் அவனுடைய சாபங்களால் நியாயந்தீர்க்கப்படுகிறான், அவனுடைய துதிக்கும் வடிவங்களால் அல்ல.

நமது வழிகளை தினமும் ஆய்வு செய்வது, ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாகும், அப்பொழுது எந்த விதத்திலும் நம்முடைய வார்த்தைகள் தேவனை அவமதிப்பதாக இருப்பதைக் கண்டறிந்தால், "**ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்**" என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (1 யோவா. 2:1). நமது வழக்கறிஞரின்/பரிந்துபேசுபவரின் நாமத்தில் நாம் நம்பிக்கையுடன் நமது பிதாவிடம் சென்று, நம்முடைய தவறை உணர்ந்து, அவரது நாமத்தையும் அவரது காரியத்தையும் நமது பரிசுத்த நடக்கையின் மூலம் கனப்படுத்த தவறியதற்காக ஆழமாக மனம் வருந்தி, பாவங்கள் நம் மீது சுமத்தப்படாமலிருக்க, கிறிஸ்துவினுடைய விலைமதிப்பற்ற இரத்தத்தில் விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டுள்ளேன் என்று தாழ்மையுடன் அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் புண்ணியத்தின் மூலம் நமது சுத்திகரிப்புக்காக அவரது கிருபையினால் மன்னிக்கப்பட மனத்தாழ்மையுடன் ஜெபிக்க வேண்டும்.

"**நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே**" (ரோம. 14:10), மேலும் தற்போதைய காரியாதிகளின் ஒழுங்குமுறையானது - அதன் "**வானங்கள்**" மற்றும் அதன் "**பூமி,**" "**ஒழிந்துபோகும்,**" "**இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்?**" (2 பேது. 3:11). தெய்வீக சாயல் என்பது எந்தத் தீங்கு விளைவிக்கும் வதந்திகளையும், எந்த அசுத்தமான அல்லது பரிசுத்தமற்ற உரையாடலையும், எந்த விசுவாசமற்ற அல்லது கலகத்தனமான வார்த்தைகளையும் நிச்சயமாக உள்ளடக்காது. கிறிஸ்துவின் நாமத்தை நேர்மையோடும் உண்மையோடும் கூப்பிடுகிற அனைவரிடமிருந்தும், இத்தகைய விஷயங்கள் வெகு தொலைவில் வைக்கப்பட வேண்டும். நமக்கும் பிறருக்கும் தீங்கிழைக்கும், வருந்தாத, மன்னிக்கப்படாத, வீணான, முறையற்ற வார்த்தைகளின் எந்தப் பதிவும் நமக்கு எதிராக இல்லை என்பதை உறுதிசெய்ய, கர்த்தரிடம் நம்முடைய கணக்குகளை சரிசெய்ய அனுதினமும் நாம் நினைவில் கொள்வோமாக. "**எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக உங்கள் உரையாடல் இருப்பதாக.**" (பிலி. 1:27).

ஒவ்வொருநாளும் தேவனிடம் நம்முடைய கணக்குகளைச் சமர்ப்பித்து, ஒவ்வொரு அடுத்த நாளிலும் அதிகமதிகமாய் ஜெயங்கொள்வதற்கான ஆற்றலுக்காக அவருடைய கிருபையை நாடினால், நாம் நியாயத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தேவனுக்கு முன்பாக கிறிஸ்துவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டவர்களாக நிற்பதற்கு சாட்சியாக அவருடைய பரிசுத்த ஆவியை நம்முடைய ஆவியில் பெற்றிருப்போம். ஆகவே, அன்பான சகோதரர்களே, நாம் "**நம்முடைய நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு, நம்முடைய வழிகளைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கக்கடவோம்.**" ***

# தீர்க்கமாக எண்ணுதல் அவசியம்

## Conclusive Counting A Necessity

**.“என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தஞ்செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோசனைகளும் அநேகமாயிருக்கிறது: ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிமுடியாது: நான் அவைகளைச் சொல்லி அறிவிக்கவேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள்.” (சங். 40:5).**

தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளை, யேகோவா தேவனுக்கும் தனக்கும் முன்பாக நிச்சயமாக கணக்கு ஒப்புவிக்க வேண்டும். இது ஒரு புத்திசாலித்தனமான செயல்முறை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தற்கால செல்வத்தையும் அதன் பெருமைகளையும் தேடுபவர்களின் காரியத்திலேயே இவ்விதமாய் இருக்குமானால், ஆவிக்குரிய விஷயங்களின் சம்பந்தமாக எவ்வளவு அதிகமாக கவனமாகக் கணக்குப் பார்க்க வேண்டியதாயிருக்கிறது! கர்த்தருடைய ஜனங்கள் வெறுமனே செல்வத்தைத் தேடுபவர்களாக இருப்பதில்லை, அது சில வருடங்கள் நீடிக்கும், உடனடியாக இல்லை என்றாலும் விரைவில் - கல்லறையில் அதைப் பிரிந்து செல்ல வேண்டும்; அவர்கள் அழிவில்லாத பொக்கிஷங்களையே தேடுகிறார்கள், அவைகளை திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை. கூடுதலாக, ராஜ்யத்தின் ஐசுவரியங்களோடு அவர்கள் நிச்சயமாக - பரலோக அல்லது பூமிக்குரிய ராஜ்ய கனத்தையும் மகிமையையும் தேடுகிறார்கள். நம்முடைய வேதவசனங்களுக்கு இசைவாக, கிருபையின் அற்புதமான வேலைகள் ஏற்கனவே நமது சார்பாக செய்யப்பட்டுள்ளன; அத்துடன், எதிர்காலத்திற்கான எண்ணங்கள், திட்டங்கள், நோக்கங்கள் மற்றும் வாக்குத்தத்தங்கள் ஆகியவைகளும் நமது சார்பாக செய்யப்பட்டுள்ளன. ஆம், தீர்க்கமாக [ஒரு பகுத்தறிவு செயல்முறையின் ஓர் நியாய விவாத பலன்] எண்ணுதல் அவசியமாகும்.

அவருடைய வார்த்தையின் மிகப் பெரிய மற்றும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களில் நமது பங்கை விட்டுவிடாதபடி, தேவனுடைய வல்லமையுள்ள கரத்தை இறுக்கமாகப் பிடித்துக் கொள்வோம். கணக்கொப்புவிக்கும் நாளிலும், கணக்குகளை மறுபரிசீலனை செய்யும் இந்த நாளிலும், தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஒவ்வொரு பிள்ளையும் கர்த்தரை சார்ந்தே இருக்க விரும்புவதைக் காணலாம், ஆம், அவருடைய ஆறுதலின் பராமரிப்பில். இந்த பாடத்தின் தலைப்பு வசனத்தை நாம் ஆராயும்போது, அதன் பொருள் எவ்வளவு அழகாக இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம்: (1) ஏற்கனவே செய்து முடித்த அல்லது நிறைவேற்றப்பட்ட கிருபையின் அற்புதமான வேலைக்காக தேவனுக்கு நன்றி செலுத்துதல்; மற்றும் (2) நமக்கான அவருடைய எண்ணங்கள், அவருடைய திட்டங்கள், அவருடைய நோக்கங்கள் மற்றும் இன்னும் நிறைவேறாத, அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசத்தின் கரத்தால் நாம் பற்றிக்கொண்டிருப்பதாகும்.




தேவன் ஏற்கனவே நமக்காகச் செய்துள்ள காரியங்களைத் திரும்பிப் பார்க்கும்போது, இவற்றில் சிலவற்றை தீர்க்கதரிசி வரையறுத்திருப்பதைக் காண்கிறோம், அவர் இவ்வாறு கூறுகிறார், “**பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தினார்.**” (சங். 40:2). இதை நாம் நமக்கு இருதயப்பூர்வமாக பிரயோகித்துக் கொள்ள முடிந்தால், நன்றி செலுத்துவதற்கு இது எப்பேற்பட்ட காரணமாயிருக்கும்! நாம் நம்மைக் குறித்து, தேவன் இல்லாமல், உண்மையான நம்பிக்கை இல்லாமல் உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடப்பதைக் காணும்போது, நாம் திரும்பிப் பார்த்து, கர்த்தர் எவ்வாறு ஆக்கினை மற்றும் பாவத்தின் கொடூரமான குழியிலிருந்து நம்மை விடுவித்தார் என்பதையும் எவ்வாறு நம்மீது கிருபை கொண்டு, நம்மை விடுவித்து, கற்பாறையாகிய அஸ்திபாரமான கிறிஸ்து மற்றும் அவரது மீட்புப் பணியின் மீது நமது நம்பிக்கையின் கால்களை நிறுத்தினார் என்பதையும் காணலாம்; நல்லது நாம் அவருக்கு நன்றி செலுத்துவோமாக, அவருடைய இரக்கங்களைப் பற்றி எல்லா இடங்களிலும் கூறுவோமாக.

பின்னோக்கிப் பார்க்கையில், நம்முடைய இரட்சகர் மற்றும் நமது தேவனை நாம் தெரிவுசெய்து உறுதிபடுத்தின அந்த மகிழ்ச்சியான நாளினை, நமது பயணத்தை ஆரம்பித்த காலமாக காணலாம் - நமது போக்கு இனி தடுமாறாது. அங்குதான் நாம் ஒரு நிலையான நோக்கத்தைப் பெற்றோம், இது தத்துவம் மற்றும் மனித

யூகங்களின் மாறுபட்ட காற்றுகளால், இந்த வழியிலோ அல்லது அந்த வழியிலோ தூக்கி எறியப்படும்போது நாம் வருத்தப்படுவதை தடுக்கும் ஒரு நிலைப்பாடாகும். அவர் ஏற்கனவே நமக்காகச் செய்தவைகளுக்காகக் தேவனைத் துதியுங்கள்! "**நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார்**"என்று தீர்க்கதரிசி கூறுவதைப் போல் நாம் உணர்வதில் ஆச்சரியமில்லை (சங். 40:3). இந்த புதிய பாடல் சந்தேகம் அல்லது பயம் அல்லது பாவிகளின் துயரம் பற்றியது அல்ல, மாறாக தேவனுடைய நீதி, கிருபை மற்றும் அன்பின் பாடலாகும். தேவனுக்கு நன்றி! தீர்க்கமாக எண்ணுதல் நமக்கு ஒரு புதிய வாழ்க்கையை கொண்டு-வந்துள்ளது; மற்றும் வாழ்க்கையில் ஒரு புதிய இன்பம், அத்துடன் புதிய விருப்பங்கள் மற்றும் மற்றவர்களுக்கும் நமக்கும் புதிய நம்பிக்கைகளையும் கொண்டு வந்துள்ளது. கர்த்தருடைய கரத்திலிருந்து நாம் ஏற்கனவே பெற்றுள்ள ஆசீர்வாதங்களுக்காக – அவர் நமக்காகச் செய்த காரியங்களுக்காக நாம் ஒருபோதும் அவருக்கு நன்றி செலுத்தாமலிருக்க முடியாது.

கர்த்தருடைய தயவினால் நாம் ஏற்கனவே அனுபவித்துக் கொண்டிருக்கும் விஷயங்கள், அவரை நேசிப்பவர்களுக்காக இன்னும் வைக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களின் முன்னறிவிப்பாகவே இருக்கிறது என்று நமக்கு உறுதிபடுத்தப்பட்டிருக்கிறது அந்த ஆசீர்வாதங்களை பார்ப்பதற்கோ மதித்துணர்வதற்கோ அவைகளை கண் காணவுமில்லை, காது கேட்டதுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. ஆனால் தேவன் அன்போடு அறிவித்திருக்கிறார். விசுவாசத்தால் நாம் புரிந்துக்கொள்ளவும் இப்போது விசுவாசிகளுக்கு வாக்களிக்கப்பட்ட மகிமையையும் கனத்தையும் ஒரு கண்ணாடி வழியாக தெளிவற்ற முறையில் காண்கிறோம். இப்போது நாம் பெற்றிருப்பவைகள் வாக்குத்தத்தங்கள் மற்றும் நம்பிக்கைகள் மாத்திரமே தவிர வரப்போகும் யதார்த்தமானவைகள் அல்ல. நிகழ்கால அனுபவங்கள் நமது ஆறுதலின் ஆரம்பம் மட்டுமே என்பதால், தேவனுடைய தயவின் எண்ணிக்கையை கணக்கிடவோ அல்லது எண்ணவோ முடியாது என்ற தீர்க்கதரிசியின் வார்த்தையுடன் நாங்கள் உடன்படுகிறோம். இந்த கடமையைக் கைவிட நாம் ஒருபோதும் விரும்பக் கூடாது.

நாம் தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்படும்போது, அவர் நமக்கு இவற்றைக் கொடுப்பதில் மகிழ்ச்சியடைகிறார், அதற்குப் பதிலாக, நாம் அவருக்கு நன்றியுணர்வை செலுத்தும் விதத்தில் செயல்பட வேண்டும் என்பதே அவருடைய கோரிக்கையாகும், உண்மையில் நாம் அவருடைய சந்ததியினராகவும், அவரது ஆவியின் வாசஸ்தலமாகவும் இருக்கிறோம். தற்போதைய உடைமைகளை கணக்கிட்டு சமநிலையில் உள்ள பொதுவான விஷயங்களில் வெறுமனே நாம் திருப்தி-யடைந்துவிட வேண்டாம். மாறாக கடந்த கால ஊழிய வருடங்களில் நாம் அனுபவித்த சிலாக்கியங்கள் மற்றும்



சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி கற்றுக்கொள்! 2 தீமோ. 2:15

கிருபைகளையும் அவைகளை நாம் பயன்படுத்தியதையும் ஆராய்ந்து பார்ப்போமாக.

நமது அன்றாட வாழ்க்கையின் எந்தெந்த அம்சங்கள் நமக்கு மிகவும் உதவிகரமாக இருந்தன என்பதை ஜாக்கிரதையுடன் கவனிப்போமாக. அதே ஜாக்கிரதையுடன் நமது ஆவிக்குரிய முன்னேற்றத்தை எவை தாமதப்படுத்தி, கர்த்தருடனான நமது ஐக்கியத்தைத் தடுத்து, சுவிசேஷத்தில் நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தை பொறுமையுடனும் சிறந்த பலன்களுடனும் ஓடுவதைத் தடுக்கிறது என்பதையும் கவனிப்போமாக. இந்த விஷயங்கள் ஒவ்வொரு தனி-நபருக்கும் நிச்சயமாக மாறுபடும் – ஏனெனில் இரண்டுபேர் ஒரே மாதிரியான குணாதிசயம் அல்லது சூழலில் இல்லை. ஒவ்வொருவரும் தனது எண்ணுதலைச் செய்வதில் ஜெபத்தில் கர்த்தருடனான நட்புறவு மற்றும் ஐக்கியத்-திலிருந்து பெறப்பட்ட நன்மைகளை எடைபோட வேண்டும்!

## கர்த்தருடைய சத்தத்திற்கு கவனமாக இருத்தல்

தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளையாக அங்கீகரிக்கப்பட்டவர்கள், கர்த்தருடன் பேசுவதில் எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள் என்பது மட்டுமல்ல, கர்த்தரின் சத்தத்தைக் கேட்டு – வேதவாக்கியங்களை ஆராய்ந்து, தனிப்பட்ட முறையில் தனக்கும், சபைக்கும் மற்றும் உலகத்துக்கும் தொடர்பான தெய்வீக சிந்தையையும் தெய்வீக திட்டத்தையும் தேடுவதில் எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிசாய்க்கும் இந்த விஷயத்தில், கிறிஸ்துவின் குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களாகிய சகோதரர்கள் மூலம் கர்த்தர் வழங்கிய வேதாகம ஆராய்ச்சி படிப்புக்கான உதவிகளை கணக்கில் கொள்ள வேண்டும் – அதே சமயம், அவருக்கு பிரிய-மாயிருந்தபடியால் தேவன் தாமே பல்வேறு அங்கத்தினர்-களை ஏற்படுத்தி வைத்துள்ளார் என்றும், ஒருவரை-யொருவர் ஆசீர்வதிக்கும் நோக்கத்துடனும், சபையை மேம்படுத்தி, மிகவும் பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டி-யெழுப்பவும் அவர் அங்கங்களை ஏற்படுத்தியுள்ளார் என்ற அப்போஸ்தலரின் கூற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

உண்மைதான், அப்போஸ்தலர்கள்தான் முதலாவது மற்றும் முதன்மையானவர்கள் என்பதை நாம் கருத்தில்

கொள்ள வேண்டும், அந்தக் கூற்றின் மூலம் அவர்களின் போதனைகள் முதன்மையானவை என்றும், மற்ற அனைத்து போதனைகளும் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் சாட்சியங்களோடு இணக்கமாயிருக் கின்றனவா என்ற சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். எவரேனும், கணக்கிடப்படும்போது, அவர்கள் எதிர்பார்த்தபடி நல்ல முன்னேற்றம் அடையவில்லை, அல்லது தங்களை சுற்றியுள்ள சிலரை விட அவர்களின் நெருக்கப் பாதையில் குறைந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளனர் என்பதைக் கண்டறிந்தால், கிருபை, ஞானம் மற்றும் அன்பில் வளர தெய்வீகமாய் நியமிக்கப்பட்ட வழிமுறையை, அதாவது தேவனுடைய வார்த்தை மற்றும் சகோதரத்துவத்தை பயன்படுத்துவதை தவறவிட்டதால்தான் இந்த முன்னேற்றத்–தில் தோல்வி ஏற்பட்டது என்பதை அவர்கள் பரிசீலிக்க வேண்டும். எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட வில்லை என்றால், சத்தியத்திற்கென்று ஊழியம் செய்வதில் நீங்கள் முடிந்தவரை சுறுசுறுப்பாக இருந்தீர்களா இல்லையா என்பதைப் பார்க்க மற்றொரு காரியத்தை ஆராயலாம். "**நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.**" (2 தீமோ. 2:15). "**பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்: ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது**" (யோவா. 9:4) என்று இந்த வார்த்தைகளில் கொடுக்கப் பட்டுள்ளபடி நாம் செயல்படுவோமாக.

நீங்கள் உங்கள் முழு வாழ்க்கையையும் கர்த்தருக் கென்று பிரதிஷ்டை செய்துள்ளீர்கள் என்பதையும், அவருடைய வழிகாட்டுதலின்படி, ஒரே உண்மையான சபையாகிய அவருடைய சகோதர சகோதரிகளின் நலன்களுக்காக அது கொடுக்கப்பட வேண்டும் என்பதை–யும் கருத்தில் கொள்ளுங்கள். உங்கள் ஜீவனைக் கொடுக்கும் இந்த விஷயத்திலும், உங்களால் இயன்றவரை சகோதர சகோதரிகளுக்கு சேவை செய்வதிலும் உண்மை–யுள்ளவர்களாக இருந்திருக்கிறீர்களா, இல்லையா என்பதை சிந்தித்துப் பாருங்கள், எண்ணுங்கள், கணக்கிடுங்கள். மற்றவர்களுக்கு சத்திய ஊழியம் செய்பவர் கர்த்தருடைய கிருபையும், சத்தியமும் நிறைந்த பந்தியில் தனக்குத்தானே அதிகமதிகமாக பொருந்தும்படி செய்ய வேண்டும், நீர்பாய்ச்சுபவர் தனக்குத்தானே நீர்பாய்ச்ச வேண்டும் என்பது கர்த்தருடைய ஏற்பாட்டின் ஒரு பகுதி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## முறையான எண்ணுதலுக்கான உதாரணங்கள்

நம்முடைய தீர்க்கமான எண்ணுதலில், ஊக்க மளிக்கும் அப்போஸ்தலர்களிடமிருந்து சில குறிப்புகள் மற்றும் ஆலோசனைகளை எடுத்துக்கொள்வோம்; அவர்கள் ஒவ்வொரு விஷயங்களையும் காரியங்களையும் எப்படி எண்ணி கணக்கிட்டார்கள் என்பதைக் கவனிப்போம். அவர்கள் எந்தெந்த விஷயங்களை லாபக் கணக்கிலும், எந்தெந்த விஷயங்களில் நஷ்டக் கணக்கிலும் குறிப்பிடு–கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொள்வோம். அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள்: "**என்** [பூமிக்குரிய] **பிராணனையும் நான் அருமையாக** [விலையேறப்பெற்ற, மதிப்புமிக்கதாக] **எண்ணேன்.**"(அப். 20:24). "**என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்.**" (பிலி. 3:8). "**அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிற தில்லை.**" (பிலி. 3:13; டயக்லாட்).

தற்காலத்தில் ஏற்படும் சில இழப்புகளுக்கு இனிவரும் மகிமைகள் மாத்திரமே தகுதியானவை என்று மாத்திரம் மதிப்பீடு செய்யாமல், கிறிஸ்துவைப் பற்றிய அறிவும் (அவர் மூலம் நமக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபையைப் பற்றிய அறிவும், பரிசுக்காக பந்தயத்தில் ஓடுவதற்கான அறிவு மற்றும் அதைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் உட்பட) விலைக்கான மதிப்பாக இருக்கிறது என்பதும் அப்.பவுலின் மதிப்பீடாகும். இந்த அறிவையும் அதன் வாய்ப்புகளையும் பெறுவதற்காக எல்லாவற்றையும் இழப்பது ஒரு பெரிய பேரம் பேசுதல் என்று அவர் மதிப்பிட்டார். இந்த நல்ல சொத்தான – கிறிஸ்துவைப் பற்றிய அறிவு – அவரது குணாதிசயங்களைப் பற்றிய அறிவும், அதைப் பற்றிய ஆழமான பாராட்டும், அவரை மையமாகக் கொண்ட திட்டத்தைப் பற்றிய அறிவும் கொண்டிருந்தால், நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம் – அது பூமிக்குரிய பொருளின் எந்த விலையைக் கோரினாலும் பரவாயில்லை; நமக்கு இந்த அறிவு இருந்தால், அவர் நமக்கு விலையேறப்பெற்றவராக இருந்தால், இன்று நாம் ஐசுவரியவான்களாக இருக்கிறோம், தேவனுக்கு நன்றி!

அதே அப்போஸ்தலன் ஏற்கனவே எல்லாவற்றையும் இழந்துவிட்டதாகவும், "கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கும்," "அவருடைய சரீரத்தின் அங்கமாக" அவரில் காணப்படுவதற்கும் "அவற்றை குப்பையுமாக எண்ணுகிறேன்" என்று கூறுகிறார். எப்படி எண்ணுவது என்பதற்கான கூடுதல் ஆலோசனை, அப்போஸ்தலனாகிய யாக்கோபின் வார்த்தைகளில் காணப்படுகிறது, "**நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்**" (யாக். 1:2,3). ஒவ்வொருவரும் நம்முடைய பிரதிஷ்டையின் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது, நம்முடைய பாதையில் எண்ணற்ற கண்ணிகளும் சோதனைகளும் இருந்ததைக் காண்கிறோம். சிலவற்றில், சந்தேகமின்றி, நாம் உடனடியாக வெற்றிகளைப் பெற்றோம்; மற்றவற்றை ஒரு வேளை கடுமையான போராட்டத்தின் மூலம் வென்றிருக்கலாம்; இன்னும் சிலவற்றில் அநேகமாக

பகுதியளவு வெற்றிகள் மட்டுமே பெற்றிருக்கலாம்; அவை நம் எதிராளிக்கு பகுதியளவு தோல்விகளாகவும், பகுதியளவு வெற்றிகளாகவும் இருந்தன.

இந்த சோதனைகள் நமக்கு கொண்டு வந்தது என்ன? அவற்றின் மதிப்பு என்ன? இதன் ஒரு மதிப்பு, அப்போஸ்தலர் குறிப்பிடுவது போல், இது பொறுமைக்கான பாடம். கர்த்தரிடம் நம்முடைய விசுவாசத்தையும், அவருடைய புண்ணியத்தின் மூலம், அவருடைய ராஜ்யத்தில் பங்கு பெறுவதற்கான நம்முடைய தகுதியையும் நிரூபிக்க ''நாம் இன்னும் பள்ளி காலத்திலும், சோதனைக் காலத்திலும் இருக்கிறோம்'' என்பதை அவர்கள் நமக்கு நிரூபித்தார்கள். சோதனைகள் அனைத்தும் முடிந்துவிட்டதாகவும், ஜெயங்கொள்பவர்கள் மத்தியில் ஒருவராக நாம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அனைவரும் அடிக்கடி விரும்புகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் பொறுமை, விசுவாசம் மற்றும் நம்பிக்கை ஆகியவை நமது இருதயங்களில் சுத்திகரிப்பு வேலையைச் செய்ய வேண்டும், இது நம்மை மென்மையாகவும், மனப்பூர்வமாகவும், கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்களாகவும் ஆக்குகிறது. நல்ல வேலையானது தொடர்ந்து நடைபெறட்டும்.

நம்முடைய சோதனைகள் நமக்கு ஏதேனும் பயனுள்ள படிப்பினைகளை கொண்டு வந்திருந்தால், அது நமது குணபண்புகளை வலிமையாக்குவதற்கும், சத்தியம் மற்றும் நீதியின் மீது அதிகமாக உறுதிப்படுவதற்கும், நம்முடைய சொந்த பலவீனங்களை நன்கு அறிந்திருப்பதோடு, அதற்கு எதிராக அதிக எச்சரிக்கையுடன் இருக்கவும் வழிவகுத்தது என்றால் நாம் மகிழ்ச்சியடைவோம். யோபு 2:10-ல் மிகத் தெளிவாகப் பேசுகிறார், [ஆசீர்வாதம்] ''**தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம்** [துன்பம்] ***தீமையையும் பெறவேண்டாமோ?***'' (ரோதர்ஹாம்). பகுதியளவு வெற்றிகளை மட்டுமே விளைவித்த அந்த போராட்டங்கள் கூட நமக்கு சாதகமாக இருந்திருக்கலாம். நிச்சயமாக நமது பலவீனங்களுக்கு எதிராக அல்லது எதிரியின் ஏமாற்றங்களுக்கு எதிராக நாம் எந்த அளவிற்கு போராடுகிறோமோ அந்த விகிதத்தில், முழுமையான தோல்வியில் கூட, அதன் விளைவாக குணாதிசயத்தை வலுப்படுத்துதல், மீண்டும் அந்தக் காரியத்தில் அதிக வைராக்கியத்திற்கான உறுதிப்பாட்டுடன் படிகமாகுதல் மற்றும் ஜெபத்தில் கர்த்தருக்கு முன்பாக மனத்தாழ்மை ஆகியவற்றைப் பெறலாம், இது ஜெபத்தின் சிலாக்கியத்தை மீண்டும் நினைவில் கொள்ள நம்மைத் தூண்டுகிறது; இந்த புதுப்பிக்கப்பட்ட சிலாக்கியத்தின் மூலம், ஒவ்வொரு சோதனையிலும் நாம் தப்பித்து, நமக்குத் தேவையான உதவியைக் கண்டறிந்து கொள்ளலாம்.

அப்போஸ்தலனாகிய பவுல் தனது கணக்கைச் சுருக்கமாக, அதை பின்வருமாறு சமன் செய்தார்: ''**ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில்** (விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களிடத்தில்) **வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.**'' (ரோம. 8:18). நமது எண்ணுதலில், ஒவ்வொரு வருடமும் நம் கணக்கில், நாம் பட்ட பாடுகள் சிலவாக இருந்தாலும், பலவாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும், பெரியதாக இருந்தாலும்-கிறிஸ்துவுக்காக, நீதியின் பொருட்டு, சத்தியத்தின் பொருட்டு நாம் எத்தகைய பாடுகளை அனுபவித்தாலும் அதையே கணக்கிடுவோம் - கிறிஸ்துவின் நாமத்திற்காகவும், அவருடைய காரணத்திற்காகவும், அவருடைய சகோதரர்களுக்காகவும் இன்னின்னவைகளைச் சகித்துக்கொள்ளுவது நமக்கான உயர்ந்த சிலாக்கியமாக இருக்கும் வகையில், நாம் அதைக் குறித்து சந்தோஷப்பட்டு, இந்த எல்லா விஷயங்களிலும் அதிக விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாயிருக்க பிரயத்தனம் பண்ணக்கடவோம்.

''**ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்**'' (மத். 5:48) என்று பிரதிஷ்டை செய்தவர்களை யேகோவா தேவன் அழைக்கிறார். இருதயம், நோக்கம் மற்றும் சித்தம் ஆகியவற்றின் பரிசுத்தத்தைத் தவிர வேறெதுவும் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்காது என்பதை இந்தக் கொள்கை காட்டுகிறது. தேவன் முழுமையான பரிபூரணத்தை தவிர குறைவான தரம் எதையும் ஏற்படுத்தி வைக்கவில்லை, ஆனால் நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடந்தால், அவர் நமக்கு கிருபை, இரக்கம் மற்றும் சமாதானத்தை வழங்குவார். நம்மை நாமே ஒப்பிட்டுப் பார்ப்பதாலும், சரியான மாதிரியை நம் மனதில் தொடர்ந்து வைத்திருப்பதை புறக்கணிப்பதாலும் மோசமான விளைவுகள் வருகின்றன. உங்களுக்கென்று ஒரு பரிபூரண தரத்தையும், எனக்கு இன்னொன்றையும், வேறொருவருக்கு இன்னொன்றையும் அவர் கொண்டிருக்க முடியாது. தேவனுடைய பரிபூரணமே தரநிலை ஆகும். பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய மனப்பான்மையையே நம்மில் பெற்றிருக்கிறோம்; ''**அவர் நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்.**'' (ஏசா. 61:10).

நமது வாழ்க்கைக் கணக்கின் லாப நஷ்டப் பக்கங்களை நாம் நிச்சயம் கணக்கிட வேண்டும்; அவ்வாறு செய்வதன் மூலம், அனைவரும் விசனப்படக்கூடிய குறைபாடுகளில், அப்போஸ்தலன் குறிப்பிடும் தீமையை நம்மில் எவரும் காணவில்லை என்பதற்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம், அதாவது, நம்மில் எவரும் ''**உடன்படிக்கையின் இரத்தத்தை, ...**[சாதாரணமாக அல்லது அசுத்தமாக] **அசுத்தமென்று**'' எண்ணவில்லை. எபி. 10:29.



## யோசேப்பும் அவனுடைய சகோதரர்களும்
## ஆதி. 37:1-28, 31-36; 39:2-10,16—40:23

யாக்கோபு தன் தகப்பன் அந்நியராய் தங்கிருந்த கானான் தேசத்திலே குடியிருந்தான். யாக்கோபுடைய சந்ததியின் வரலாறு: யோசேப்பு பதினேழு வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான்; அந்த இளைஞன் பில்காள் சில்பாள் என்னும் தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளின் குமாரரோடே இருந்து, அவர்களுடைய துன்மார்க்கத்தைத் தன் தகப்பனுக்குச் சொல்லி வருவான். இஸ்ரயேலின் முதிர்வயதிலே யோசேப்பு தனக்குப் பிறந்ததினால், இஸ்ரயேல் தன் குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்து, அவனுக்கு பலவருணமான அங்கியை செய்வித்தான். அவனுடைய சகோதரர் எல்லாரிலும் அவனைத் தங்கள் தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர் கண்டபோது, அவனோடே பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார்கள்.

யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டு, அதைத் தன் சகோதரருக்கு அறிவித்தான்; அதினிமித்தம் அவனை இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள். அவன் அவர்களை நோக்கி: நான் கண்ட சொப்பனத்தைக் கேளுங்கள்: நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந் தோம்; அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்றான். அப்பொழுது அவன் சகோதரர் அவனைப் பார்த்து: நீ எங்கள் மேல் துரைத்தனம் பண்ணுவாயோ? நீ எங்களை ஆளப் போகிறாயோ? என்று சொல்லி, அவனை அவன் சொப்பனங்களின் நிமித்தமும், அவன் வார்த்தைகளின் நிமித்தமும் இன்னும் அதிகமாக பகைத்தார்கள்.

அவன் வேறொரு சொப்பனம் கண்டு, தன் சகோதரரை நோக்கி: நான் இன்னும் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது என்றான். இதை அவன் தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் சொன்னபோது, அவன் தகப்பன் அவனைப் பார்த்து: நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க வருவோமோ? என்று அவனைக் கடிந்துகொண்டான். அவன் சகோதரர் அவன்மேல் பொறாமை கொண்டார்கள்; அவன் தகப்பனோ அவன் சொன்னதை மனதிலே வைத்துக்கொண்டான்.

பின்பு, அவன் சகோதரர் சீகேமிலே தங்கள் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கப்போனார்கள். அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: உன் சகோதரர் சீகேமிலே ஆடுகளை மேய்க்கிறார்கள் அல்லவா? உன்னை அவர்களிடத்துக்கு அனுப்பப்போகிறேன், வா என்றான். அவன்: இதோ, போகிறேன் என்றான். அப்பொழுது அவன்: நீ போய், உன் சகோதரருடைய க்ஷேமம் எப்படி என்றும், ஆடுகள் எப்படி இருக்கிறது என்றும் பார்த்து, எனக்கு மறுசெய்தி கொண்டு வா என்று அவனுக்குச் சொல்லி, எபிரோன் பள்ளத்தாக்கிலே இருந்து அவனை அனுப்பினான். அந்தபடியே அவன் சீகேமுக்குப் போனான்.

அப்பொழுது ஒரு மனிதன் அவன் வெளியிலே வழிதப்பித் திரிகிறதைக் கண்டு, என்ன தேடுகிறாய் என்று அவனைக் கேட்டான். அதற்கு அவன்: என் சகோதரரைத் தேடுகிறேன், அவர்கள் எங்கே ஆடு மேய்க்கிறார்கள், சொல்லும் என்றான். அந்த மனிதன்: அவர்கள் இவ்விடத்திலிருந்து போய்விட்டார்கள், தோத்தானுக்குப் போவோம் என்று அவர்கள் சொல்லக் கேட்டேன் என்றான்; அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரைத் தொடர்ந்துபோய், அவர்களைத் தோத்தானிலே அவர்களுடைய ஆடுகளை மேய்க்கிறதை கண்டுபிடித்தான்.

### "இதோ, சொப்பனக்காரன் வருகிறான்"

அவர்கள் அவனைத் தூரத்தில் வரக்கண்டு, அவன் தங்களுக்கு சமீபமாய் வருமுன்னே, அவனைக் கொலைசெய்யும்படி சதியோசனைபண்ணி, ஒருவரை ஒருவர் நோக்கி: இதோ, சொப்பனக்காரன் வருகிறான், நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றிலே அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள். ரூபன் அதைக் கேட்டு, அவனை அவர்கள் கைக்குத் தப்புவித்து, அவனை அவன் தகப்பனிடத்துக்குத் திரும்பவும் கொண்டு போக மனதுள்ளவனாய் அவர்களை நோக்கி: அவனைக் கொல்ல வேண்டாம், நீங்கள் இரத்தம் சிந்தலாகாது; நீங்கள் அவன்மேல் கை வையாமல், அவனை வனாந்தரத்திலுள்ள இந்த குழியிலே போட்டுவிடுங்கள் என்று சொல்லி, இவ்விதமாய் ரூபன் அவனை அவர்கள் கைக்குத் தப்புவித்தான்.

யோசேப்பு தன் சகோதரரிடத்தில் சேர்ந்தபோது, யோசேப்பு உடுத்திக் கொண்டிருந்த பலவருண அங்கியை அவர்கள் கழற்றி, அவனை எடுத்து, அந்தக் குழியிலே போட்டார்கள்; அது தண்ணீரில்லாத வெறுங்குழியாயிருந்தது. பின்பு, அவர்கள் போஜனஞ் செய்யும்படி உட்கார்ந்தார்கள்; அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கும்போது, இதோ, கீலேயாத்திலிருந்து வருகிற இஸ்மவேலருடைய கூட்டத்தைக் கண்டார்கள், அவர்கள் எகிப்துக்குக் கொண்டுபோகும்படி கந்தவர்க்கங்களையும் பிசின் தைலத்தையும் வெள்ளைப்போளத்தையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றிக் கொண்டு வந்தார்கள்.

அப்பொழுது யூதா தன் சகோதரரை நோக்கி: நாம் நம்முடைய சகோதரனைக்கொன்று, அவன் இரத்தத்தை மறைப்பதினால் லாபம் என்ன? அவனை இந்த இஸ்மவேலருக்கு விற்றுப்போடுவோம் வாருங்கள்; நமது கை அவன்மேல் படாதிருப்பதாக; அவன் நம்முடைய சகோதரனாக இருக்கிறானே என்றான். அந்த வர்த்தகரான மீதியானியர் கடந்துபோகிறபோது, அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கியெடுத்து, அவனை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவர்கள் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டு போனார்கள்.

அவர்கள் யோசேப்பின் அங்கியை எடுத்து, ஒரு வெள்ளாட்டுக்கடாவை அடித்து, அந்த அங்கியை இரத்தத்திலே தோய்த்து, பல வருணமான அந்த அங்கியைத் தங்கள் தகப்பனிடத்துக்கு அனுப்பி: இதை நாங்கள் கண்டெடுத்தோம் இது உம்முடைய குமாரன் அங்கியோ, அல்லவோ, பாரும் என்று சொல்லச் சொன்னார்கள்.

யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்து போட்டது, யோசேப்பு பீறுண்டு போனான் என்று புலம்பி தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் அரையில் இரட்டுக் கட்டிக்கொண்டு, அநேக நாள் தன் குமாரனுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்தான். அவனுடைய குமாரர் குமாரத்திகள் எல்லாரும் அவனுக்கு ஆறுதல் சொல்ல வந்து நின்றார்கள்; ஆனாலும் அவன் ஆறுதலுக்கு இடங்கொடாமல், நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன் என்றான். இவ்விதமாய் அவனுடைய தகப்பன் அவனுக்காக அழுதுகொண்டிருந்தான். அந்த மீதியானியர் யோசேப்பை எகிப்திலே பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள்.

கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவனானான், அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான். கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணுகிறார் என்றும் அவன் எஜமான் கண்டு; யோசேப்பினிடத்தில் தயவுவைத்து அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்.

அவனைத் தன் வீட்டுக்கும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் விசாரணைக்காரனாக்கியது முதற்கொண்டு, கர்த்தர் யோசேப்பினிமித்தம்

அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது. ஆகையால், அவன் தனக்கு உண்டானதையெல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்புக்கொடுத்துவிட்டு, தான் புசிக்கிற போஜனம் தவிரத் தன்னிடத்திலிருந்த மற்றொன்றைக் குறித்தும் விசாரியாதிருந்தான். யோசேப்பு அழகான ரூபமும் சௌந்தரிய முகமும் உள்ளவனாயிருந்தான்.

பின்பு போத்திபார் மனைவி யோசேப்பை பாவம் செய்ய தூண்டினாள். அவனோ, தன் எஜமானுடைய மனைவியின் சொல்லுக்கு இணங்காமல், அவளை நோக்கி: இதோ வீட்டிலே என்னிடத்தில் இருக்கிறவைகளில் யாதொன்றைக் குறித்தும் என் ஆண்டவன் விசாரியாமல், தமக்கு உண்டான எல்லாவற்றையும் என் கையில் ஒப்பித்திருக்கிறார். இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத் தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி? என்றான். அவள் நித்தம் நித்தம் யோசேப்போடே இப்படிப் பேசிக்கொண்டு வந்தும், அவன் அவளோடு இருக்கவும் சம்மதிக்கவில்லை. பின்பு அவள் தன் கணவரிடம் அவனை பொய்யாக குற்றம் சாட்டினாள், யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து, ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையிலே அவனை ஒப்புவித்தான். அந்த சிறைச்சாலையிலே அவன் இருந்தான்.

## யோசேப்பு சிறைச்சாலைத் தலைவனாக நியமிக்கப்பட்டான்

கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபை வைத்து, சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்கு கிடைக்கும்படி செய்தார். சிறைச்சாலைத் தலைவன் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவரையும் யோசேப்பின் கையிலே ஒப்புவித்தான். அங்கே அவர்கள் செய்வதெல்லாவற்றையும் யோசேப்பு செய்வித்தான். கர்த்தர் அவனோடே இருந்தபடியினாலும் அவன் எதைச் செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்க பண்ணினபடியினாலும், அவன் வசமாயிருந்த யாதொன்றையும் குறித்துச் சிறைச்சாலைத் தலைவன் விசாரிக்கவில்லை.

இந்த நடபடிகளுக்குப் பின்பு, எகிப்து ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனும் சுயம்பாகியும் எகிப்து ராஜாவாகிய தங்கள் ஆண்டவனுக்குக் குற்றம் செய்தார்கள். பார்வோன் தன் பானபாத்திரக்காரரின் தலைவனும், சுயம்பாகிகளின் தலைவனும் ஆகிய இவ்விரண்டு பிரதானிகள் மேலும் கடுங்கோபங்கொண்டு அவர்கள் யோசேப்பு வைக்கப்பட்டிருந்த இடமும் தலையாரிகளின் அதிபதியின் வீடுமாகிய சிறைச்சாலையிலே காவல் பண்ணுவித்தான். தலையாரிகளின் அதிபதி அவர்களை விசாரிக்கும்படி யோசேப்பின் வசத்தில் ஒப்புவித்தான்; அவன் அவர்களை விசாரித்து வந்தான்.

எகிப்து ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனும் சுயம்பாகியுமாகிய அவ்விரண்டு பேரும் சிறைச்சாலையில் இருக்கும்போது ஒரே ராத்திரியிலே வெவ்வேறு பொருள் கொண்ட சொப்பனம் கண்டார்கள். காலமே யோசேப்பு அவர்களிடத்தில் போய், அவர்களை பார்க்கும்போது, அவர்கள் கலங்கியிருந்தார்கள். அப்பொழுது அவன் தன் எஜமானுடைய வீட்டில் தன்னோடே காவல் பண்ணப்பட்டிருந்த பார்வோனுடைய பிரதானிகளை நோக்கி: உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள்: சொப்பனம் கண்டோம், அதற்கு அர்த்தம் சொல்லுகிறவன் ஒருவனும் இல்லை என்றார்கள்.

அதற்கு யோசேப்பு: சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள் என்றான். அப்பொழுது பானபாத்திரக்காரனின் தலைவன் யோசேப்பை நோக்கி: என் சொப்பனத்திலே ஒரு திராட்சச்செடி எனக்கு முன்பாக இருக்கக் கண்டேன். அந்த திராட்சச் செடியிலே மூன்று கொடிகள் இருந்தது; அது துளிர்க்கிறதாயிருந்தது; அதில் பூக்கள் மலர்ந்திருந்தது; அதின் குலைகள் பழுத்த பழங்களாயிருந்தது. பார்வோனுடைய பாத்திரம் என் கையிலே இருந்தது; நான் அந்தப் பழங்களைப் பறித்து, அவைகளைப் பார்வோனுடைய பாத்திரத்தில் பிழிந்து, அந்தப் பாத்திரத்தைப் பார்வோனுடைய கையிலே கொடுத்தேன் என்று தன் சொப்பனத்தைச் சொன்னான்.

அதற்கு யோசேப்பு: அந்த மூன்று கொடிகளும் மூன்று நாளாகும். மூன்று நாளுக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மறுபடியும் உன் நிலையிலே நிறுத்துவார்; முன்னே அவருக்குப் பானம் கொடுத்து வந்த வழக்கத்தின்படி பார்வோனின் பாத்திரத்தை அவர் கையிலே கொடுப்பாய்; இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி, நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்க வேண்டும். நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய் கொண்டு வரப்பட்டேன்; என்னை இந்த காவல் கிடங்கில் வைக்கும்படிக்கு நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை என்றும் சொன்னான்.

அர்த்தம் நன்றாயிருக்கிறது என்று சுயம்பாகிகளின் தலைவன் கண்டு, யோசேப்பை நோக்கி: நானும் என் சொப்பனத்தில் மூன்று வெள்ளைக் கூடைகள் என் தலையின்மேல் இருக்கக் கண்டேன்; மேற்கூடையிலே பார்வோனுக்காகச் சமைக்கப்பட்ட சகலவித பலகாரங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது; என் தலையின்மேல் கூடையில் இருந்தவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தது என்றான். அதற்கு யோசேப்பு: அந்த மூன்று கூடைகளும் மூன்று நாளாம். இன்னும் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மரத்திலே தூக்கிப்போடுவார்; அப்பொழுது பறவைகள் உன் மாம்சத்தை தின்னும், இதுதான் அதின் அர்த்தம் என்று சொன்னான்.

மூன்றாம் நாள் பார்வோனுடைய ஜன்ம நாளாயிருந்தது; அவன் தன் ஊழியக்காரர் எல்லாருக்கும் விருந்துபண்ணி, பானபாத்திரக்காரருடைய தலைவன் தலையையும் சுயம்பாகிகளுடைய தலைவன் தலையையும் தன் உத்தியோகஸ்தரின் நடுவே உயர்த்தி, பானபாத்திரக்காரரின் தலைவனைப் பானங்கொடுக்கிற தன் உத்தியோகத்திலே மறுபடியும் வைத்தான்; அந்தப்படியே அவன் பார்வோனுடைய கையிலே பாத்திரத்தைக் கொடுத்தான். சுயம்பாகிகளின் தலைவனையோ தூக்கிப்போட்டான். யோசேப்பு அவர்களுக்குச் சொன்ன அர்த்தத்தின்படியே சம்பவித்தது. ஆனாலும் பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்து விட்டான். யோசேப்பு சிறைச்சாலையில் தொடர்ந்து இருந்தான். ***

Visit us at : **www.biblestandardindia.com**

**For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:**

**Laymen's Home Missionary Movement**

**Bro. V. Vincent Jeyakumar**

**[Representative of India]**

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**